UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-8-26
PERIODICALS DIVISION
LIBRARY



ஓம் விநாயகநம

# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது


வெள்ளிக்கிழமை [20-6-1980]


ரௌத்திரி வருஷம் ஆனி மீ 6ம் உ

இதழ்: 3 சுடர்: 14

நாயன்மார் அறங்காட்டும் மலர்







## ஈகையின் பயனே இறைவனின் அருளாகின்றது என்பது சுந்தரர் கூற்றுகும்

கீழே தரப்படும் எம்பெருமான் சுந்தரர் அவர்களின் திருப்பதிகத்தை நோக்கினால் சைவம்பேணும் எல்லா மக்களுக்கும் ஈதல் (கொடுத்தல்) என்பது வ மிக முக்கியமான செயலாகக் கருதப்படுகின்றது என்பதைக் காணமுடிகின்றது.

இல்லறம் என்பதின் வேராக விளங்குவது எல்லா உயிர்கட்கும் உணவு தாகசாந்தி உபசரிப்பு முதலியன செய்தலேயாகும். அதாவது பெரியோர்கள் எமக்குப் பாரதபூமியில் நின்று போதித்த அறம் மனிதனே உன்போன்ற எல்லார்க்கும் இன்பம் தரும் நிழலைச்செய்து காயும் கனியும் தந்துநிற்கும் மரம்போல ஏனைய உயிர்கட்கு நீ பிரயோசனமாதலே கடவுளைப் பேணல் என்பதை நீ அறியச் சொல்வதே நம் உபதேசம் என்கின்றார்கள்.

கடவுள் ஒருவர் இருக்கிறார். அவரிடத்து மனிதனை ஆற்றுப்படுத்தல் (வழிசெல்லவைத்தல்) என்ற கோட்பாட்டில் அமைந்த எல்லாச் சமயங்களும் இந்த அடிப்படைத் தத்துவத்தை முழுமையாக வலியுறுத்துகின்றன.

இந்தநிலையில் சைவம் இந்த ஒரு உண்மையைத் தனது போதிப்பின் அத்திவாரமாகக் கொண்டுள்ளது. எந்த ஒரு பெரிய கட்டிடத்திற்கும் நல்ல ஒரு அத்திவாரமின்றேல் அது நீண்டநாள் நிலைபெறமாட்டாது. என்றோ ஒருநாள் சரிந்தேவீழும்.

ஆகவே சமயவளர்ச்சியிலும் அத்திவாரமான தருமம் பிழைத்தால் சமயம் தன்பாட்டில் அழியும். இன்று எமது சைவநெறியும் அத்திவாரம் உக்கிப்போக சரியும் கட்டிடம்போல் இருக்கின்றது. சரியும் கட்டிடத்திலிருந்து எப்படி வாழலாம். எனவே தான் நாம் இன்று நமது தர்மமும் உண்மையும் நமது சமயத்தில் அற்றுவிட்டது. வெளிக்கோலமே அன்றி வேறொன்றுமில்லை எனச் சொல்ல வேண்டிவந்துள்ளது. இதை நாம் நமது தர்மத்தின் அடிப்படையில் சொல்லுகின்றோம். பிராமணர்கள் ரேடபேசிக் கும்பாபிஷேகம் செய்வதும், தங்கம்மா, மணி ஐயர், கிருபானந்தவாரிபோன்றோர் பணம்பெற்றுக்கொண்டு சமயம்பற்றிப் பேசுவதும் முற்றுமுழுக்கத் தவறான செயலாகும். ஆகையினாலே இவர்கள் செய்யும் பிரசாரத்தினால் எதுவித பயனுமில்லை. அதுவும் சங்கள் பிரசாரத்தைக் காசுக்காகச்செய்து சமயத்தை வளர்த்துவருகிறார்கள் என்று கூறுவதானால் இதைப்போன்ற கடைகெட்ட தொழில் வேறொன்றில்லை. இவர்கள் யாவரும் பெரும்பாதகராகவே கருதப்படுவார்கள். இதோ கீழ்வருகின்ற சுந்தரமூர்த்திசுவாமிகளின் இரண்டாவது தேவாரத்தை வாசியுங்கள், அவர் என்ன சொல்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். கோயில் யாருடையது? அது அறஞ்செய்வாருடையது எனச்சொல்கின்றார். ''நறு நீரொடு சோறு கிறி பேசி நிறைந்திடுவார் தொழும் கேதாரம்'' என்கின்றார்.

இதன் கருத்து என்ன என்று கேட்டால் பசித்தார்க்கு — துன்பப்பட்டார்க்குச் சோறும் நீரும் கொடுத்தார் தொழுகின்ற கேதாரம் என்கின்றார். இங்கு எங்கள் நாட்டில் யாழ்ப்பாணத்திலே தாகசாந்தி செய்வதற்கு மடம் கட்டியவர் யார்? அன்றி அன்னதானம் செய்வதற்கு எங்கு ஒரு மடம் கட்டிவைத்திருக்கிறார்கள். அப்படிக் கட்டிவைத்த மடங்கள் எங்காகிலும் இருக்குமேயானால் அந்த மடங்களில் முடிகாரர் குடிகொண்டிருப்பதைக் காணலாம். அன்பு என்ற பொருளுக்குத் தருமம் என்பது கருத்தாகும். தருமம் செய்யாதவனுக்கு அன்பானது எப்படி வரும். அயலவன் பட்டினியால் வாடியிருக்க அவனுக்கு ஒருவேளை சோறளித்துக் காக்க வகைதெரியாது கிருபானந்தவாரியையோ தங்கம்மாவையோ அல்லது பரமாசசாரியரையோ பணம்கொடுத்துக் கூட்டிவந்து பிரசங்கம் செய்விப்பதில் என்ன பயனுண்டு. இதை நான் சொல்வதாக எண்ணுதீர்கள். சுந்தரமூர்த்திசுவாமிகள்தான் சொல்கிறார்கள்.

தமக்குப் பலம்வருமென்ற கருத்தில் உணவை அதிகம் உண்டுவிட்டு படையும் தீட்டிவைத்து பலகொலைகள்மூலம் நாட்டிலே நாட்டாண்மைக்காரன் என்ற போர்வையில் வாழ்பவர் வாழ்வு பிழையெனக்கூறுவர் சுந்தரமூர்த்திசுவாமிகள் தமது நாலாவது பாடலில். இது வழக்கம் என்று கூடச் சொல்ல அருகதையற்றது என்றும் கூறுகின்றார். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து ''பறி நிரப்புவார் தவமாகுதல் செய்மின்'' என்கின்றார். இதன்கருத்தைச் சிறிது சீர்தூக்கிப் பாருங்கள். சாப்பாடு தவத்துக்காக என்பதை உணருங்கள்.

உண்ட சோறு ஒரு பொழுதும் கொலைசெய்யப் பலமாகக்கூடாது. அச்சோறு தவம்செய்யப் பலம்தருவதாக அமையவேண்டும்.

இந்த உண்மைவழிகளை ஒருபுறத்தே உதறித் தள்ளிவைத்துவிட்டுக் கோயிலெல்லாம் சீர்காழி கோவிந்தராசனை அல்லது சினிமா நடிகைகளைக் கூப்பிட்டுப் பாடவைப்பதன் மூலம் சைவம் வளர்ப்பது என்பது மிகவும் பேதைத்தனமானது. இதனால் பிள்ளையார்சிரா, கந்தசுவாமியார்சிரா அல்லது சிவனோ மகிழமாட்டார்கள். இப்படிப்பட்ட வேடிக்கைகள் செய்யும் ஆலயங்களில் குடிகொண்டிருந்த கடவுளரும் இவற்றைக்கண்டு வெளியேறிவிடுவர் திருவருள் என்பது ... லாம். தெய்வீகம் என்பது தவத்திற்குக் கட்டுப்பட்டதேயன்றி வேறு எவ்வித கேளிக்கைகள்மூலமும் அதைக் கட்டுப்படுத்த முடியாது. இதனால்தான் பெரியோர்கள் எனப்படுவோர் சிவனை அடையும்பொருட்டுத் தவம் செய்து வருகிறார்கள். தவத்துக்கு என்ன இலக்கணம் என்பதைப்பற்றிச் சந்திரதீபத்தில் அநேகமாக விளக்கவந்தோம். தவம் செய்வது என்பது மூச்சைப்பிடித்து எவரும் ஓடாமல் பிராணாயாமம்செய்து பிராணாயாமமூலம் ஏதோ ஏதோ செய்வதல்ல. தவம் செய்வது என்பது தமக்குரிய கடமையைச் செய்தல். அதுவும் எந்த உயிர்க்கும் தீங்கு செய்யாதிருத்தல். இந்தவழிதான் நாயன்மார் காட்டிய வழியாகும். இல்லறம் ஆனாலென்ன துறவறம் ஆனாலென்ன இரண்டுக்கும் வழி இதுவேயாகும்.

திருநாவுக்கரசர்பெருமானோ, சுந்தரர்பெருமானோ, திருஞானசம்பந்தப்பெருமானோ அல்லது மாணிக்கவாசகரோ யோகம் செய்யவில்லை. அவர்கள் செய்ததெல்லாம் தமது பண்ணான இறைவனைப் பாடுவது; அடுத்து உயிர்கள்மீது இரக்கப்படுவது.

கணவன் பாம்புதீண்டி இறந்ததைக் கண்ட பெண் கிடந்து புலம்புகிறாள். கோயில் கும்பிடச்சென்ற சம்பந்தர் பெருமான் கும்பிடுதலைவிட்டு குழறிய பெண்ணிடம் சென்று அவளுக்காகக் கும்பிடுகிறார். இதை இன்று யார் செய்வார்கள். இன்று மடங்களை வைத்து ஆட்சிசெய்யும் சுவாமிகளில் யார் செய்வீர் இப்படி என்பதை உம் நெஞ்சைத்தொட்டுக் கேட்டுப் பாருங்கள்.

நாய்கள் மெத்தையில் படுத்துத் துயில்வதுபோல ஊரின் நம்பிக்கைச் சொத்தான மடங்களிலிருந்து ஊர்ச் சொத்தை நாசமாக்குவோரும் சுவாமிகளே நீங்களும் சுவாமிகளா? சாயிபாபா போலவும் குறளிவித்தை கண்கட்டுவித்தை போன்றவற்றைச் செய்வீர்களாயின் இன்னும் பெரிய மோசாளிகளாக மடாதிபதிகள் வாழலாம். இன்னும் அநேக பெண்கள் உங்களிடம் தரிசனைக்காக வருவார்கள். அவர்களை உங்கள் ஆரியாசனத்தில் வைத்திருக்கலாம். ஆதலினாலே சைவமக்களே உண்ணும்போது பிறர்க்கு ஒரு பிடிசோறிட்டு உண்டு உண்ணுதவன் சைவனல்ல. அவனுடைய இல்லம் மாளிகையாகக் காட்சியளிப்பினும் அது காடாகும் என்பதை உணருங்கள் ஆதலினாலே இம்முறை இப்பதிகத்தை உங்களுக்குத் தேர்ந்தெடுத்து வாழ்க்கையின் பிரயோசனமாவது அழிவிலாத மெய்ப்பொருள் தவமும் தருமமும் என்பதை உணரவைக்கிறோம்.

ஆலயங்களில் திருவிழா உபயம் செய்யமுற்படும் சைவமக்களே இரவோடிரவாகக் கதறிக்கத்திப் பாட்டுக்கச்சேரிகள் வைத்து கோயிலமைதியையும் ஊரின் அமைதியையும் கெடுத்து காளசாமியாருக்கு வருவாயைப் பெருக்குவதையும் விட்டு இந்தக்காசினால் உங்கள் ஊரிலுள்ள ஏழைமக்கள் உண்டு உடுத்து இனிய பானமருந்தி மகிழ உங்களால் இயன்றளவில் உண்பதற்குச் சுவையுடைய உணவும் உடுப்பதற்கேற்ற வஸ்திரமும் அருந்த நல்ல நீராகாரமும் கொடுத்து அன்பினை வளருங்கள். அதன் மூலம் அருளைப் பெறுங்கள். இதுவே நால்வர்காட்டிய வழியாகும். நிலையாமை பற்ற உலகிலே நிலையான செயல் இதுவேயாகும் என்பதைச் சந்திரதீபம் உங்களுக்குப் பணிவுடன் தெரியவைக்கிறது.

## அன்னதானச் சுப்பையர்

தென் இந்தியாவில் தமிழ்நாட்டில் சுப்பையர் என்னும் ஓர் அந்தணர் வசித்துவந்தார், அவருக்கு அங்கு அநேக நெல்வயல்கள் இருந்தன. அந்த வயல்களில் விளையும் நெல்லைக் கொண்டு அன்னதானம் செய்வதே சுப்பையரின் வேலையாகும். இதனால் சுப்பையருக்குத் தமிழ்நாட்டில் அதிக மதிப்பிருந்துவந்தது. ஆனால் சுப்பையர் வறுமையிலேயே உழன்று கொண்டிருந்தும் அன்னதானம் செய்வதைக் கைவிடவில்லை. இதனால் அந்தணர் சுப்பையர் அன்னதானச் சுப்பையராகத் தமிழ்கூறும் நல்லுலகெங்கும் போற்றப்பட்டுவந்தார்.

அன்னதானச் சுப்பையர் காலத்திலே அவர் ஊரில ஓர் மிராசுதாரும் அன்னதானச் சுப்பையரிலும்பார்க்க அதிக நெல்வயல்களும் காணிகளும் அதிகாரமும் பெற்றிருந்தும் அன்னதானச் சுப்பையர்போல் தமிழ்நாட்டில் பேர் பெற்றிருக்கவில்லை. இதனால் அன்னதானச் சுப்பையர்மேல அந்த மிராசுதாருக்குப் பொறாமை இருந்துவந்தது. தமது பொறாமையால் உந்தப்பட்டுவந்த மிராசுதார் அன்னதானச் சுப்பையர்மேல வரி கட்டவில்லை என்று ஓர் வழக்கை மேலிடத்தில் தாக்கல்செய்திருந்தார்.

அப்போது கலக்டராகத் தமிழ்நாட்டில் இருந்தவர் ஓர் ஆங்கிலேயராகும். இவர் மிராசுதாரின் முறைப்பாட்டின் பேரில் அன்னதானச் சுப்பையரின் வழக்கை விசாரிக்க முன் வந்திருந்தார். அன்றைய விசாரணையில் கலக்டர் துரையவர்கள் அன்னதானச் சுப்பையரைப் பார்த்து ''நீர் என் அரசுக்கு வரிகட்டவில்லை'' என்று கேட்டார்.

கலக்டரின் கேள்வி அன்னதானச் சுப்பையருக்கு நல்ல சாட்டையாகும் என்று மிராசுதார் நினைத்திருந்தார். ஆனால் அன்னதானச் சுப்பையரோ சட்டென்று ''துரை அவர்களே என்னிடம் வரிகட்டுவதற்கு வழியில்லை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்ன் எனது வயல்களில் விளையும் நெல்லைக்கொண்டு மக்களுக்கு அன்ன தானம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருப்பதால் என்னுல் நீங்கள் குறிப்பிடும் வரியைச் கட்டமுடியா திருக்கிறது '' என்ருர்.

மிராசுதார் கலக்டர் அவர்களைப் பார்த்து '' துரை அவர்களே இவர் அநேக நெல்மூடைகளை வைத்திருக் கின்ருர்: தன்னைச் சேர்ந்தவர்கள் சிலருக்கே அதுவும் தன்நலம் கருதிச் சிலவேளைகளில அன்னதானம் செய்வ துண்டு. அதைச் சாக்காகக்கொண்டு அரசை ஏமாற்றப்பார்க்கிருர் '' என் ருர்.

கலக்டர்துரை இவ்வழக்கைப் பிறிதொரு திகதிக்கு ஒத்திவைத்தார். அந்தத் திகதிக்குச் சிலநாட்களுக்கு முன்பாக ஓர்நாள் இரவு தன்னை உருமாற்றிக்கொண்டு ஒரு பறையர்குலத் தைச் சார்ந்தவர்போல உருவமைத்து முக்காடிட்டு அன்னதானச் சுப்பையர் இல்லத்தை அடைந்து '' ஐயா பசிக் கிறது '' என்று குரல்கொடுத்தார். குரல்கேட்ட சுப்பையர் ஓடோடிவந்து '' இந்த நேரத்தில் வந்துவிட்டாய்; என்னசெய்வது? பழையதுதான் இரு க்கிறது. உண்பாயா '' என்று கேட் டார்.

'' நீங்கள் பழையதானுலும் தந் தால் நான்கொண்டுசென்று வீட்டில் எனது பிள்ளைகளுடன் உண்ணலாம் '' என்ருர் அந்தப் பறையகுலத்தவர்.

சுப்பையரும் இருந்த அன்னம் முழு வதையும் அக்காலத்தில் மரத்தால் செய்யப்பட்டு மரவை என அழைக் கப்படும் பாத்திரத்தில் இட்டுக் கறி களையும்போட்டு அந்தப்பறையகுலத் தவரிடம் கொடுத்தார். அந்தப் பறையகுலத்தவரும் சுப்பையரைப் பார்த்து '' ஐயா இந்த ஏதனத்தை எப்போது கொண்டுவந்து தரவேண் டும் '' என்று கேட்கவும் '' உனக்கு வசதியேற்படும்போது கொண்டுவந்து தா '' என்று அன்னதானச் சுப்பை யர் கூறினுர்.

சிலநாட்கள் சென்றதும் அன்ன தானச் சுப்பையர் விசாரணைக்காகக் கலக்டர் கந்தோருக்குச் சென்றிருந் தார். மிராசுதாரும் மிகவும் மிடுக் காக மீசையை முறுக்கிவிட்டபடி அன்னதானச் சுப்பையரை அலட் சிய நோக்குடன் பார்த்து '' அம்பிட் டுக்கொண்டார் சுப்பையர்; அன்ன தானமும் அவரின் மதிப்பும் இன் றுடன் கப்பலேறப்போகிறது'' என்று மனதில் நினைந்து இளமுறுவல் செய்த படி இருந்தார்.

வழக்கத்துக்கு மாருக கலக்டர் துரையின் கந்தோர் மேசையில் வெள் ளைத்துணி விரிக்கப்பட்டு அதன்மேல் ஒருபொருள் இன்னெரு துணியால் மூடிவைக்கப்பட்டிருந்தது.

கலக்டர்துரை மேசையடியில் உள்ள கதிரையில் வந்தமர்ந்ததும் மிராசு தார் வழக்கைக் கூறவும், கலக்டர் துரை அன்னதானச் சுப்பையரைப் பார்த்து '' நீர் ஏன் வரிகட்டாது அரசை ஏமாற்றுகிறீர்: அது தண் டிக்கப்படவேண்டிய குற்றமாகும் '' என்ருர்.

'' துரை அவர்களே! நான் என்ன செய்வேன், என்வீட்டில் ஒரு சிறு நெல்மணிதானும் இல்லை. எல்லாம் அன்னதானத்திற்காகச் செலவு செய்துவிட்டேன் '' என்ருர்.

மிராசுதார் எழுந்து '' இவர் கூறு வது முழுவதும் பொய்யாகும். இவ ரிடம் நெல்மூடைகள் உண்டு. அது வும் அவரின் இனத்தருக்கே உண வுக்காகச் சிலவேளைகளில் சிறிது சோறு கொடுப்பார் '' என்ருர்.

கலக்டர்துரை அவர்கள் அன்ன தானச் சுப்பையரைப் பார்த்து ''நீர் எந்த நேரத்திலும் எவருக்கும் சாதி பார்க்காது அன்னதானம் செய்வ துண்டா '' என்ருர்.

'' ஆம் பிரபு '' என்ருர் அன்ன தானச் சுப்பையர். '' அப்படியானுல் கடைசியாக யாருக்கு அன்னதானம் செய்தீர் '' என்பதைச் சொல்லமுடி யுமா '' என்று கலக்டர்துரை கேட்க வும், '' சில நாட்களுக்கு முன்பு ஓர் பறையகுலத்தவர் வந்து தனது பிள்ளை களும் தானும் பசியால் வாடுவதாக வும் அதற்கு ஏதாகிலும் தரும்படி கேட்டார். நான் அவருக்கு ஒருமர வையில் அன்னமும் கறியும் கொடு த்துவிட்டேன் என்ருர். ''அந்தமர வையை அவர் திரும்ப உம்மிடம் ஒப்படைத்துவிட்டாரா'' என்று கலக் டர் துரை கேட்கவும் இல்லை என் ருர் அன்னதானச் சுப்பையர்.

உடனே மேல் மூடியிருந்த துணி அகற்றப்பட்டு ஒரு மரவை அவரிடம் காட்டப்பட்டது. இது உம்முடை யதா என்று கேட்டதும் ஆம் என் ருர் அன்னதானச் சுப்பையர். இந் நிலையில் கலக்டரின் கண்கள் கலங் கின. உடனே கலக்டர் மிரசுதாரை நோக்கி இவர் அன்னதானம் செய் வதால் அரசுக்கு எவ்வளவோ நன் மைகளைச் செய்பவராகக் கருதுகி றேன். ஏனெனில் மக்களுக்கு அன் னதானம் அளிப்பது அரசாங்கத்தின் ஒரு கடமையாகக்கருத இடமுண்டு. அதை இந்த அன்னதானச்சுப்பைய ரே செய்து வருவதால் அவர்பேரில் அரசுக்கு வரவேண்டிய வரிப்பாக்கி யாவும் ரத்துச் செய்யப்பட வேண் டும். இனிமேலும் அவரிடம் வரி அறவிடக்கூடாது என்று எழுதி அதை அவ்வூர் வரி அறவிடும் மிராசுதாருக் கும் கடும் எச்சரிக்கைசெய்து அனுப்பி வைத்தார். இதிலிருந்து '' தருமம் தலைகாக்கும் '' என்பதை உணரமுடி கிறது: இது உண்மையில் தமிழ்நாட் டில் நடந்தது என்று உ. வே. சாமி நாதஐயர் எழுதிய புத்தகமொன்றில் பார்த்த ஞாபகம். அது யோக சுவாமிக்கு மிகவும் பிடித்தகதையான மையாலும் இங்கு பிரசுரிக்கிருேம்.

கீழேதரப்படும் சுந்தரர் தேவார மும் இதை விளக்கிக் கூறுவதை அவ தானியுங்கள்.

திருச்சிற்றம்பலம்

# தருமமே பிறவியின் பேருகும் என்பதைக் காண்பிக்கும் திருப்பதிகம்

## சைவமென்பது திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் வழிநின்ற சிவனடியார்க்கு அமைவதாகும்

## திருக்கேதாரம்

பண் : நட்டபாடை

**வாழ்வாவது மாயம்இது மண்ணுவது திண்ணம்**
**பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்**
**தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணுன்மல ரோனும்**
**கீழ்மேலுற நின்ருன்திருக் கேதாரமெ னீரே.**

வாழ்வு என்பது ஒருமயக்கம். இந்த வாழ்வு மண்ணுகிப் போவது திணணம். எமது பிறவி மண், பெண், பொன் என்று சொல்லப்படுகிற மூன்றினதும் மேல் சொண்ட ஆசையால் பாழாகிப்போவது. இந்தப்பிறவி கடலில் ஏற்படுகி ன்ற அலைகள் ஒன்றன்பின் ஒன்ருக எப்படி அடு த்து அடுத்து வந்துகொண்டிருக்குமோ அதே மாதிரியே பிறவியும் அடுத்து அடுத்து வந்துகொ ண்டேயிருக்கும்.

எமக்குக் கிடைத்த பிறவியில் நாம் எடுத்த இந்த உடம்பாவது பசி என்னும் நோய் திரும் பத் திரும்ப ஏற்படும்படி ஆக்கப்பட்ட ஒரு கூடா கும். இந்தக் கூடிற்கு முடிவு மரணமே ஆகும். ஆனதினுலே இதனையுணர்ந்து நீங்கள் பசிநோய்க்கு இலக்காகிய இந்த உடம்புகளுக்குத் தாழ்வின்றி உணவுகொடுக்கின்ற தருமத்தைச் செய்யுங்கள். அந்தத் தருமத்துடன் விசாலித்த கண்களையுடைய விஷ்ணுவும் தாமரைமலர்மீது உறைகின்ற பிரம தேவனும் கீழும் மேலுமாகத் தேடி நிற்க அன் றும் இன்றும் என்றும் காண்டாற்கரியதான கடவு ளாய் நிற்கும் சிவனமர்ந்த திருக்கேதாரமெனக் கூறிக்கொள்ளுங்கள்.

வாழ்க்கை மெய்போல இருப்பினும் உண்மை யில் அது ஒரு மயக்கமே. மயக்கத்திலுருன் தெளிவுநிலையை அடைந்தால் அந்தத் தெளிவு நிலையில் உண்மைநிலை விளங்குவதுபோல உலக வாழ்வும் உண்மை அறிந்தபின் ஒருவனது மயக்கம் தெளிந்தவகையாகவே இருக்கும். ஆகையினுலே மயக்கம் மருந்தின்மூலம் தீருவதுபோல உலக மயக்கங்களும் தருமம் என்னும் மருந்தின்மூல மாகவே தீர்க்கப்படுகிறது: இதனுல் உலகமயக் கத்துக்குச் சிறந்த மருந்து தருமம் என்று கூறினர். கடலில ஏற்படும் அலைகளைப்போன்று ஆன்மாவும் தன் பாவபுண்ணியங்களுக்கேற்ப உடம்புகளை எடுத் துக்கொள்ளும். இதைச் கடக்கமுடியாது. சிவ சம்பந்தம் உடையவர்களன்றி ஏனையோர்க்கு இது பெறமுடியாது.

திரும்பத் திரும்ப எமது உடம்பில் பசி ஏற் பட்டுக்கொணடேயிருக்கிறது. இந்தப் பசி எப் பொழுதும் உடம்பைவிட்டு அகலாது. பசிக்கு உணவு கொடுத்தால் அதை உண்பவன் சிவன் என்றே சொல்கின்ருர்கள். ஆகையினுல் உணவு கொடுத்தலே தலையாய அறமாகும் எனறு சொல் கின்ருர். அதுவும் தாழ்வின்றிக் கொடுங்கள் என் கின்ருர். ஏனெனில் கடவுளை அடைவதற்கு இது தான் ஒருவழி.

பாழ்போகும் பிறவியில் கொடுத்ததுதான் அழி விலாதது. ஒரு பிறவியில் கொடுத்தது பல பிறவிக் கும் உறுதுணையாகும் என்பது பெரியோர் துணிபு.

இந்த உடம்பைவிட்டு உயிர்பிரிந்ததும் அது ஒரு தனிவழிக்குச் செல்லும். அந்தத் தனிவழி யில் எம்மைத் தாங்கிக்கொள்வது தருமம் என்று பெரியோர்கள் துணிந்து கூறியுள்ளார்கள். இலை யை அவித்து உண்ட வேளையிலும அந்த இலை உணவையாதல் பிறர்க்கும் கொடுத்து உண்பானே யாகில் உடல நீங்கியபின உயிர்செலலும் அந்தத் தனியான வழிக்கு இந்தக் கொடையால் ஏற்பட்ட விளைவை '' பெருதிச்சாலும் உறுதுணையாகும் '' என்ற வாக்கின்மூலம் அருணகிரியார் எமக்கு எடுத்துரைக்கின்ருர்.

**பறியேசுமந் துழல்வீர்பறி நரிகீறுவ தறியீர்**
**குறிகூவிய கூற்றங்கொளும் நாளால் அறம்உளவே**
**அறிவானிலும் அறிவானல நறுநீரொடு சோறு**
**கிறிபேசிநின் றிடுவார்தொழு கேதாரமெ னீரே.**

உயிர் இருக்கும் கூடாய பறியினை (உடம்பு) சுமந்து நீவிர் திரிகின்றீர்கள். அரும்பாடுபட்டுப் பேணிய உடம்பை சுடுகாட்டில் போனபின் தன் பல்லால் நரிகிழித்து உண்ணுமென்பதை நீர் உணரமாட்டீர்: தனது கணக்கைநோக்கி அழைத் துச்செல்லும் நாளொல் ... அறம் உண் ... அறிவாளிகளி லும் அறிவாளியாகி நல்ல நீருடன் சோறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராணங்கள் பொய்யுடன் கலந்தன

### என்ருர் யோகசுவாமி

சிவதொண்டன் நிலயத்தில் பயன்சொல்லிவரு கின்ற காலத்தில் பலரும் என்பயனைக்கேட்டு மகிழ்ந்து வருவது வழக்கம். சிவதொண்டன்நிலை யத்தில் அந்த நாளில நாம் பெரியபுராணம் கந்தபுராணம் இரண்டினையும் மாறிமாறிப் படித்து வருவோம். அப்படிப் படித்துவரும் காலத்தில் நான் கந்தபுராணத்தில் பெரிய புராணத்தில் சொலலிய அறங்களை நன்கு உணர்ந்து கூறுகிவரு வேன். அந்த நாடகளில என்னையறியாத ஒரு ஆன்ம பெலம் ஏற்படும்.

இப்படியான ஒருநிலையில் புராணம் இவை முழு வதும் உண்மையானவை என்ற நம்பிக்கையில் இருந்தேன். அப்படி இருக்கும்போது எனது மன தில் ஒரு சந்தேகம். அதாவது அவையாவும் உண்மையாகவும இருக்கலாமோ எனவும் நினைப்ப துண்டு. எப்படியாயினும புராணமீது கொண்ட பற்று அந்தச் சந்தேகங்களை முறியடித்துவிடும்.

இப்படியான நாட்களில் ஒருநாள் சுவாமியைக் கண்டேன். அவர் உடனே என்னைநோக்கி ''பெரிய புராணம் கந்தபுராணம் இவற்றிலும் பொய் கிடக்கின்றது. எல்லாப் புலவரும் பாடும்பொழுது பல பொய்யும்சேர்த்துப் பாடியுள்ளனர். கந்த புராணத்தில் முக்கால்வாசி பொய். பெரியபுரா ணம் அரைவசி பொய்; முழுவதையும மெய் யென்று நீ நம்பிவிடாதே. உணமைக் கதைகளை உணர்ந்துகொண்டு நல்லொழுக்கத்தில் நின்ருல் தான் உயர்ந்த சிந்தனையைப் பெறமுடியும். ஆகை யினுலே இவைகளால் அநேகம் செலவழிப்பதை விட்டு நல்லொழுக்கங்களை உயிரினும பெரிதாகக் கொள் என்று கூறினுர். நேரத்துக்குச் சாப்பிடு; நேரத்திற்கு நித்திரைவிட்டெழு, வறுமைப்பட் டார்க்கு — இல்லாதவருக்கே தானஞ்செய் இப் படிப் பல அறவுரைகளைக் கூறினுர் யோகசுவாமி.

## கடவுள் அறிவுடன் இருந்தால் அதுவும் இறக்கும்

### என்ருர் யோகசுவாமி

ஒருநாள் யோகசுவாமி என்னைநோக்கி நீ சாகப் பயப்படுகிருய். இந்த உலகில் தோன்றிய அறி வுடைய உயிர்வர்க்கம் யாவும் இறக்கும். கடவு ளும் அறிவோடிருந்தால் அதுவும் இறக்கும். அது

தமக்கையாருடன் திருவதிகைவீரட்டானம் செல்கின்றார்: திருநாவுக்கரசர் அங்கு சென்று வலம் வந்து இறைவனைப்பணிதலும்சூலைநோய் சிறிது நீங்கிட முற்றாக சூலைநோய் நீங்கவேண்டி இறைவனைப் பாடும் ஆற்றல் சிவனருளால் ஏற்படுகின்றது.

திருநீறு நிறையப்பூசிய மேனியுடன் முன் நின்று சிவனை கூற்றாயின வாறு விலக்ககில்லீர் எனும் பதிகம் பாடுகின்றார். இப்பதிகத்தினையே இப்பத்திரிகையில் காண்கிறீர்கள்.

இப்பதிகம் பாடி சூலைநோய் நீக்கியதுமன்றி சமணர் செய்த எத்தனையோ வஞ்சனைச் செயல்கள் நீற்றறையில் இடுதல். நஞ்சூட்டல் ஆனை இடறப்பண்ணல் கல்லுடன் கட்டி கடலில் போடுதல் ஆன இச்செயல்கள் யாவையும் சிவனருளின் துணையால் வென்றார். அவர் வெற்றி உலகில் நீதியின் வெற்றியாகி நம்போன்ற எல்லா மக்களுக்கும் அவர் வழியைக் கடைப்பிடித்து உய்யும் ஒரு வெற்றியாகிறது.

ஆகவே தமிழ் மக்களே தமிழ் மக்களாகிய எமது நிலையில் நாம் இலங்கை நகரில் சுபிட்சமுடன் வாழ விரும்பின் ஒவ்வொருவரும் அகிம்சை முதல் எண்வகைச் சீலங்களையும் நல்ல உறுதியுடன் கடைப்பிடித்து ஒழுகும் சைவராக வேண்டும். இந்த எண் வகைச் சீலங்களையும் யார் யார் கடைப்பிடித்து இறைவனை வழிபடுகிறாரோ அவரால் தமிழினம் வாழும். அது மட்டுமன்றி எமது பாரத புண்ணிய பூமியின் முன்னர் காலத்து அமும் தழைத்து ஐரோப்பிய நாடுகளில் பரவிவரும் மிருகவெறி அகலும். எல்லா மக்களும் நலமுடன் வாழ்வார்கள்.

இப்பாடலை நன்கு நீங்கள் ஓதிவரின் உங்கட்கு உற்ற பிணிகள் நீங்கும். பகை ஏற்படாது. பகைவரும் பணிவார்: திருநாவுக்கரசரை கொல்ல வஞ்சனை செய்த பல்லவ அரசனே திருநாவுக்கரசரை வந்து பணிந்து நன்னெறிப்பட்டான் என்றால் இனியும் சிங்கள மக்கள் எம்மைத் முடியுமோ சொல்லுங்கள்? நாம் யாவரும் ஏதும் ஒரு கபடமின்றி எண்வகைச் சீலங்களையும் கடைப்பிடித்து வாழுவோம்.

வீணான ஆடம்பர விழாக்கள் கச்சேரிகள் பூங்காவனங்கள் பாராட்டு விழாக்கள் இவை யாவையும் கைவிடுத்து அகிம்சை சத்தியம் சாந்தம் புலன் அடக்கம் தயவு ஞானம் தபம் பாவனை இவற்றால் எல்லா உயிரினமே வாழ வழிகாட்டும். ஒரு சமூகமாக தமிழராய நாம் வழிகாண்போமாக.

# கொல்ல வந்த கொடிய சூலைநோய் நீக்கியருள வேண்டி பாடிய பதிகம்

## நம் பெரியோரது வழி சிவனைப் பூரணமாக நம்புதலேயாகும்

திருச்சிற்றம்பலம்

பண்–கொல்லி (4–ம் திருமுறை)

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடி யேன் அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

எனது உயிரை நீக்கும்படி இயமன் போல வந்த வரலாறு உடைய இதனை நீக்கி விலகிடச் செய்யும்; கொடுமைகள் பலவும் செய்தமைநான் அறியேன். உமது திருவடிக்கு ஏற்கும்படி இரவும் பகலும் உம்மையே பூரணமாக நம்பி எப்பொழுதும் வணங்குவேன். எங்கிருந்து இன்நோய் வந்தது என அதன் மூலம் நாடியறிய முடியாதபடி என் வயிற்றின் உள்ளாக நின்று என் குடலை தூக்கி குற்றுவது போன்று தொடங்கி என்னை எழுந்திருக்க முடியாது முடக்கியிட எம்பிரானே இதனை இனியும் சகித்தல் ஆற்றேன். நான் உமது அடியேன் திருவதிகையில் கெடலம் என்னும் ஆற்றங்கரையில் திருவீரட்டானத்து தங்கியருளும் எம்பிரானே!

சூலை நோயின் வேகம் பேசப்படுகின்றது: குடரைத் தூக்குவது போன்று உருட்டி பிரட்டி எழுந்திருக்க முடியாது வேதனைப்படுத்திட இதனை நான் தாங்கேன் என விண்ணப்பிக்கின்றார். இதைத் தீர்க்கும் வழி உன்னிடமே உண்டு. இந்நோய் நீயே எனக்கு தந்து நிற்கிறாய். உமது திருவடிக்கு ஏற்கும்படி இரவும் பகலும் நான் போற்றாது விடமாட்டேன் நோய் தீர்ந்தால் அதற்கு பிரதியாக இரவும் பகலும் உம்மைப் போற்றுவேன். திருவடியை எக்காரணம் கொண்டும் பிரியாது வணங்குவேன் என்கின்றார். இனி நான் செய்யக் கூடிய செயல் இதுவேயன்றி வேறு வகையறியேன். சூலை நோய் மருந்திற்கும் தீராதது கண்டு இப்படி விண்ணப்பிக்கின்றார். மருந்தினால் தீராதது கண்டு உன் வழியே வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றார்.

கொடுமைகள் நான் பல செய்திருந்தாலல்லவோ இத்தகைய நோய் எனக்கு ஏற்படவேண்டும். ஆனால் வாழ்வில் யார்க்குமேனும் பல கொடுமைகளையும்செய்து அறிய மாட்டேன் என்கிறார். என்னைப் பகைத்தாருடனும் நான் பகைக்கவில்லை. ஒருவர் துயரப்பட்டு மனம் நோவுறும்படி ஒன்றும் செய்யவில்லை என்பதால் கொடுமை பல செய்தன நானறியேன் என்கிறார். தனது அறிவிற்கு எட்டியவகை ஆர்க்கும் தீங்கு செய்யவில்லை என்பது குறிப்பு. நோயைத் தாங்கிட முடியாது தான் தவித்திடும் கவலை இப்பாடல்மூலம் எம்பிரார்க்கு எடுத்து மொழியப்படுகின்றது. 1

நெஞ்சம்உமக் கேஇட மாகவைத்தேன் நினையாதொருபோதும்
இருந்தறியேன்
வஞ்சம்இது வொப்பது கண்டறியேன் வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலுமென் னிர்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

எம்பிரானே எனது நெஞ்சை உமக்கே இடமாகும் படி வைத்தேன். உம்மை நினையாது ஒரு பொழுதும் இருந்து அறியேன், எல்லாம் அறியும் தேவரீர் இது அறியாதது போல் இருக்கின்றீர். உம்மை முற்றிலும் நம்பிவாழ்கின்ற எனக்கு உற்ற இந்தநோய் உன் செயலாகின்றது. இன்று இப்படியான ஒருவஞ்சனைச் செயலை ஒப்பவேறு ஒருவஞ்சனைச் செயலை நான் கண்டறியமாட்டேன். வயிற்றில் தொடங்கி குடலைமுடக்கி குத்திப்பிரட்டி என்னைக் கொல்ல நஞ்சு போன்று வந்து அடைந்து வருத்தும் இதனை இனியும் என்னை அணுகாமல் கலைத்து இல்லாமல் செய்துவிடும் பயப்படாதே எனச் சொல்லியருளீர். திருக்கெடிலம் என்னும் ஆற்றங்கரையில் வீற்றிருந்தருளும் திருஅதிகை வீரட்டானத்து அமர்ந்த செம்பவளச் சுடராய பெருமானே!

தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி என்ற மாணிக்கவாசகர் கூற்றிற்கிணங்க எம்பெருமான் திருநாவுக்கரசரும் தனது நெஞ்சம் கடவுள் ஒருவர்க்கே இடமாக வைத்தேன் என்கிறார்.

சைவனாக முன்பு இருந்த காலத்தும் நீங்கி சமணத் துறவியாக இருந்த காலத்தும் நெஞ்சம் சிவனுக்காக அன்றி வேறொரு நினைப்புக்கும் இடமாக வைத்திடவில்லை என்பது துணிவுடன் பேசுகின்றார். மண் பொன் பெண் என்ற ஆசைகளில் நான் மயங்கியதில்லை. அல்லது அவற்றினை தேவரீற்கு மேலாக மதித்திடவில்லை என்பது தோன்ற இவ்வகை பேசுகின்றார். பூரணமாக முழுமனதுடன் தேவரீரையே நம்பி இருந்தேன். இதுவன்றி என் நெஞ்சில் எதுவும் நினைக்கவில்லை. நினைப்பதெல்லாம் திருவடியின் நினைப்பாக நினைந்தேன் என்கிறார்.

அடுத்து சர்வமும் வல்லீர் நீர். எல்லாம் செய்யவல்லீர் நீர் என எண்ணினும் அப்படி நம்பிய எனக்கு இந்த நோயைத் தந்த வஞ்சனை இது போல வேறு இல்லை என்றதால் பெரியோரான நீர் இப்படியும் ஓர் வஞ்சனை செய்யலாமோ எனக் கேட்கின்றார். இது என்னைக் கொன்றிடும் நஞ்சு போல வந்துள்ளது எனக் கூறுகின்றார். அறியப்படாத நீ அருள் நிறைந்த நீ எனக்கொருகால் தோன்றி அஞ்சாதே எனச் சொல்லக் கூடாதோ என்கின்றார்.

காண்டற்கரிய கடவுளாகினும் கருதுவார்க்கு மிகவும் எளியவன் எனவே வேதங்கள் போற்றின ஆதலால் அந்த உண்மையும் பொய்க்குமோ எனக் கேட்கின்றார்.

நோயினால் படும் வேதனையும் மரணம் வருமோ என்ற அச்சமும் எல்லாம் மனதில் எழுந்து வருத்த தனது மனம் திகைப்புத் தீரவேண்டி தெளிவுபடுத்த அஞ்சேலுமென்னீர் எனகிறார். 2

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர் படுவெண்டலை யிற்பலி
கொண்டுழல்வீர்
துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால் சுடுகின்றது சூலை தவிர்ந்தருளீா
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர் பெற்றமேற்றுகந் தீர்சுற்றும்
வெண்டலைகொண்(டு)
அணிந்தீர்அடி கேள்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

உம்மைப் பணிந்து கொண்டாருடைய பாவங்களை நீர் நீக்கிடவல்லமை உடையீர். இறந்தாரின் வெள்ளை மண்டை ஓட்டுத்தலையில் பிச்சை ஏற்றுக்கொண்டு உலகெலாம் உழன்று திரிவீர். இவ்வுலகில் உமது திருவடி அடைய துணிந்து உமக்கு அடிமையாகி நாம் உமக்கு ஆளாகி தொண்டு செய்து வாழலுற்றால் இந்த சூலைநோய் வந்து வயிற்றைப் புரட்டிச் சுடுகின்றது நீக்கியருளீர்: இறந்தாரின் சுடலைப்பொடி கொண்டு மேனி எல்லாம் பூசும் வல்லமை உடையீர். இடபத்தை வாகனமாக ஏறி அருளுதலை விரும்பிக் கொண்டீர் சுழலும் வெண்தலைகள் கொண்டு மேனியில் மாலையாக அணிந்தீர் எனது அப்பனே என் குருமணியே! இந்த நோயை நீக்கியருளும் திருவதிகையில் கெடிலம் என்னும் ஆற்றங்கரையில் அமர்ந்தருளிய வீரட்டானத்து எம்பெருமானே!

திருவதிகை என்னும் பதியில் கெடிலம் என்ற பெயருடைய ஆற்றங்கரையில் கோயில் இருப்பதால் திருவதிகை விரட்டானம் எனப் பெயரிடப்படும்.

கெடிலம் என்னும் ஆறும் கோயிலும் நன்கமைந்தலால் கெடில வீரட்டானம் எனப் பேசுகின்றார்.

பணிவார் பாவங்களைப் போக்கிட வல்லவன் சிவன்: அத்தகைய பெருமானாகிய உன்னை வணங்கும் ஏழையேற்கு இத்துயரம் வரக்காரணமில்லை என்கின்றார்.

உமது திருவடிகட்கு தொண்டு செய்து நற்பேறடைய விரும்பிய என்னை இப்படி சூலைநோய் வருத்துகிறது. இந்நோய் உமது திருவடித் தொண்டிற்கு இடையூறாயது எனப் பேசுகின்றார். இதை ஏன் வருவித்தாய். உன்திருவடித் தொண்டு செய்யும் ஆசையால் நான் தொண்டு புரிந்து எல்லாப் பற்றையும் நீக்கிய ஓர் சந்நியாசியாக என்னை வருத்தல் அழகோ? எனக் கேட்கின்றார் இப்பாடல் மூலம்.

சுடலைப் பொடி பூசுவீர் என்றது [illegible] செய்யக் கூடாத கருமம் யாதும் இல்லை என்று வலி உறுத்திய வாறாகும். தன்னை முற்றும் சிவனிடமே ஒப்புவித்தவருக்கு ஏன் இந்த நோய் வந்து துன்புறுத்த வேண்டும் எனக் கேட்கின்றலாறாகும்.

சுற்றும் வெண்டலை என்றது எம்பெருமானுடைய திருச்சடையில் அணிந்தது நகுவெண்தலை. அதாவது சுழன்று சிரிக்கும் வெண்தலை என்றவாறு. உடம்பில் அணிந்த தலைமாலைகளும் சுழலும் இயல்புடையன என்றவகையாகக் காணலாம்; 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னம்அடி யேன்அறி யாமையினால் முனிந்தென்னை நலிந்து முடக்கிபிடப்
பின்னைஅடி யேனுமக் காளும்பட்டேன் சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந் தார்வினை தீர்ப்பதன்றோ தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்னநடை யார்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

முன்னமாக நான் கொண்ட அறியாமை மிகுதியால் என்னை அந்த அறியாமையின் மிகுதிக்கு ஏற்ற தண்டனையாக என்னைக் கோபித்து இச்சூலை நோய் என்னைத் துயருறுத்தி முடக்கியிட அதனாலே வருந்தி அடியேன் உமக்கு ஆளும்பட்டேன். ஆட்பட்ட எனக்கு சூலைநோய் வந்து சுடுகின்றது. இதைத் தேவரீர் தவிர்த்தருள வேண்டும். ஒரு தலைமைப் பாட்டை பெற்றுக்கொண்டவரின் கடமை அவரை அடைந்து கொண்டாரின் வினைகளைத் தீர்த்தருளுதலேயாகும். அன்னம்போலும் நடை உடைய பெண்கள் நடமாடும் பதியாகும் திருஅதிகை என்னும் பதியில் கெடிலம் என்னும் ஆற்றங்கரையில் திருவீரட்டானம் என்னும் கோவிலில் வீற்றிருந்தருளும் எம்பிரானே!

தான் முன்னர் தனது பணியை விடுத்து சமணனாக மாறியது தவறு என்ற எண்ணம் இப்போது அவர் உள்ளத்தை நன்கு வருத்துகின்றது. தன் செயல் அறியாமையின் செயல் என்பதை நன்றாக விளங்கிக்கொள்கின்றார். சூலைநோயின் கொடுமையும் தனது அறியாமையான செயலாலே ஏற்பட்டது எனக் கூறிடுகின்றார். என் பிழைக்காக இந்நோய் வந்துற்றாலும் தலைமைப்பாடுடையவரின் செயல் தன்னை அண்டி வந்தாரை ஆதரித்தலாகும் என்பது தெளிவுபடக் கூறுகின்றார். யோகசுவாமிகளும் தன்னை அண்டி வந்தாரை தம் குருமணி ஆதரித்திடும் தலைமைப் பாட்டுடன் நின்றவர் எனக் கூறிடுகின்றார்.

தலைமைப்பாடுடையவர் யாராக இருந்தாலும் அவரை அபயமாக அடைந்தால் ஆதரித்திட வேண்டியது கடமையாகும். இது இங்கு விண்ணப்பிக்கப்படுகின்றது. அண்டி வந்தாரை ஆதரிப்பது ஓர் தருமமாகும். சூலைநோய் வேதனையால் துயர்பட்டு வேறுவழிகாணாது பின்னர் உமக்கு ஆட்பட்டேன் என விண்ணப்பிக்கின்றார். 4

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையாற் கரைநின்றவர் கண்டு
கொளென்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட நிலைக்கொள்ளும்வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது ஒப்பது கேட்டறியேன் வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புன லார்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

ஒருவரைக் காத்து ஆளவேண்டியவர் தனது காவலை நான் செய்ய மாட்டேன் என நீக்கி இகழ்ந்து விட்டபடியால் நீந்திட ஆசைப்பட்ட ஒருவன் குளத்தில் அருகில் சென்று கரையில் நிற்பாரை என்னைக் கவனித்துக்கொள் என மொழிந்து நீந்துதற்குரிய குளத்தில் தூக்கிப்போட்டால் நீந்தத் தெரியாத நான் ஓர் நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்றையும் அறியமாட்டேன். ஆதலினால் நீந்தத்தெரியாத என்னை கரையில் ஒருவரைக் காவல்வைத்து நீ குளத்துள் இறங்கி நீந்து என்று சொல்லிடும் வஞ்சனையான வார்த்தை இது போன்றது இன்னொன்றை நான் கேட்டறியேன். ஐயனே எனது வயிற்றுடன் குடலையும் தூக்கி சுற்றுவது போல முடக்கியிட சகித்திட முடியாது வருந்துகின்றேன். நீர் பெருகி ஆரவாரித்து ஓடும் திருஅதிகை என்னும் பதியில் விளங்கும் கெடிலம் என்னும் ஆற்றங்கரையில் வீற்றிருக்கும் திருவீரட்டானம் என்னும் கோயிலில் வீற்றிருந்தருளும் பெருமானே!

காத்து ஆளவேண்டியவன் நீ. அதனை உன்னைப் பலகாலும் பணிந்த எனக்கு நீ செய்திடவில்லை. இதனாலே சமணனாக நான் மாறினேன். பிறவிக் கடலை நீந்தும் பொருட்டு உன்னை அபயம் புகுந்தேன் அதனை நீ செய்யவில்லை. என் பணிவுடைய பணிகளில் என்னை அஞ்சாதே என்று அருள் செய்யவில்லை. இதனை இங்கு முன்னம் நான் செய்த பணிகண்டும் என்னை ஏற்காது இகழ்ந்து விட்டாய். இதனை நீந்தும் ஆசையுடையான் அப்பயிற்சியில் பழக்கி ஆளவேண்டியவர் அதைச் செய்யாது இருந்தபடியால் நீந்தத் தெரியாது கரையில் நிற்பாரை நீ பார்த்துக்கொள் என்று சொல்லி விட்டு குளத்துள் தூக்கி எறிந்தால் ஆழமான குளத்துள் எவ்வாறு நான் நிலைக்கொள்வேன் எனக் கேட்கின்றார்.

இதுதான் சைவனாக இருந்த காலத்து என்னைக் காத்து ஆளவேண்டிய நீ கைவிட்டபடியால் நான் சமணனாக மாறவேண்டி வந்துளது எனக் கூறிடுகின்றார்.

காவல் இகழ்ந்தது என்றது நீந்தப்பழகியவர் தன்னைக் கைவிட்டபடியால் எழுந்த துயரம். நீந்தும் ஆசையால் கரைநின்றவர் போன்று காவல் இலாத வகை குளத்துள் மூழ்கினேன் என்றவாறு, கரை நின்றவர் சமணர் என்று குறிப்பிடுகின்றார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துதலைக் குறிப்பிடுதலே நீத்தாய கயம் என்று குறிப்பிடப்படுகின்றது. சிவன் திருவடி சேர்ந்தாரை பிறவிப்பெருங்கடல் நீந்திட சிவன்வழி காட்டுவான் என்றபடி. எம்பிரான் அருள் இலாது நான் தனித்து இயங்கமாட்டேன் என்பது குறிப்பாகும்.

நிலைக்கொல்லும் வழித்துறை என்றது நீந்தத்தெரியாதவனை நடுக் குளத்துள் தூக்கிப்போட்டால் எந்தப் பக்கத்தால் கரையேறுவது என்றது தெரியாது. குளத்தின் ஆழ்ந்தநிலையில் அமிழ்ந்திப்போவேனேயன்றி வேறு வகையறியேன் என்றதால் வழித்துறை ஒன்றறியேன் என்கின்றார்.

ஆகவே திருவருள் நெறிசேர ஆசைப்பட்ட என்னை யாரையோ பார்த்துப் கொள்ளச் சொல்லி என்னைக் குளத்தில் தூக்கிப்போடச் சொன்னவார்த்தை இது ஒப்பாகுமோ எனக் கேட்பாராகி வார்த்தை இது ஒப்பது கேட்டறியேன் எனக் கூறிடுகின்றார். 5

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன்னமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய் உடலுள்ளுறு
சூலைதவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

சலம் பூ இவற்றோடு தூபமும் கொண்டு உன்னைப் பூசித்தலை நான் மறந்து அறியமாட்டேன் தமிழ் பாடலோடு இசை இவற்றால் உன்னைத் துதித்திட மறந்து அறிய மாட்டேன். நன்மை தீமை இவற்றில் உன்னை மறந்து அறியமாட்டேன் உனது நாமமே அல்லது வேறு நாமம் என் நாவில் மறந்தும் அறிய மாட்டேன் இப்படியாக வாழ்ந்த எனக்கு இப்பிணியை விடுத்தாய் இறந்தாரின் தலையில் பலி ஏற்று உண்டு திரிபவனே என் உடலில் உள்ளாக உள்ள சூலைநோயைத் தீர்த்து அருள்புரிவீராக, ஐயோ இந்நோயால் நான் அலந்து போனேன். நான் உனது அடியேன் திருவதிகை என்னும் பதியில் ஓடுகின்ற கெடிலம் என்னும் ஆற்றின் கரையில் உள்ள வீரட்டானம் என்னும் கோயிலில் அமர்ந்த கடவுளே. என் ஐயனே!

இப்பாடல் முழுவதும்தான் முன்பு சைவனாக இருந்த காலத்தில் தாம் செய்து வந்த பூசனையின் சிறப்பை எடுத்துக் கூறியபடி, தெய்வத்தை பூரணமாக நம்பி இருந்த தனக்கு இந்நோய் வரவேண்டிய காரணம் இல்லை. இது உனது அருளால் வந்துளது. ஆதலினாலே இவற்றைத் தீர்த்து வைக்க வேண்டியது உனது கடனாகும். இந்த அருளியபாட்டைச் செய்தே முடித்தருள்வாயாக என விண்ணப்பிக்கின்றார்.

சமணனாகமாறியதும் உன்னை அறியும் அவாவினால் அத்தாகத்தால் நேர்ந்ததன்றி வேறில்லை என விண்ணப்பிக்கின்றார். தெய்வம் உண்டு என்ற சித்தமும் அதனை மலரிட்டு வணங்கலும் தான் எக்காலமும் தவிரவில்லை என்பது குறிப்பாகின்றது. தூய சைவமரபில் பிறந்த இவர் சலம் பூ தூபம் இவற்றுடன் வழிபாடு தவறாது செய்திருப்பார் என்பதை நாம் இங்கு குறிப்பால் உணரலாம்.

தேவனை எந்நிலையிலும் வேண்டி நின்ற தன்மை இங்கு பேசப்படுகின்றன. 6

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும் ஒருவர்தலைகாவல்
இலாமையினால்
வயந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால் வலிக்கின்றது சூலை தவிர்ந்தருளீர்
பயந்தேயென் வயிற்றினகம்படியே பறித்துப்புரட் டிஅறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

ஐயனே மனைவாழ்க்கையில் பெரும் அவாவும் நற்பொருள்தேட்டமும் விரும்பி நான் உயர்ந்து கொண்டேன்; இப்படியாக உலக இன்பமே பெரிது என எண்ணிவாழும் மனத்தினைத் தடுத்து நிறுத்தி இதில் பயன் ஏதும்இல்லை எனத் தெரிவித்திட ஒருவரும் எனக்கு தலைவராக அல்லது குருவாக நின்று என்னைப் பழுதுகளுள் போகவிடாது தடுத்திடும் காவல் இல்லாமையால் அப்படி மனைவாழ்க்கை பெரிதென உணர்ந்து அதில் உயர்ந்தேன். இதை எல்லாவற்றையும் நீக்கி உபவயமாகி உமக்கு ஆளாகித் தொண்டு செய்து வாழலாமென்றால் என் வயிற்றில் சூலைநோய் வலிக்கின்றது தவிர்த்தருள்வீராக. என் வயிற்றில் பற்றி வயிற்றின் உள்ளாக குடலைப்பறித்து புரட்டி ஈர்த்து வலித்திட என் ஐயா நான் மயங்கி அயர்ந்தேன். உனது அடியேன் திருவதிகை என்னும் பதியில் ஓடுகின்ற கெடிலம் என்னும் ஆற்றங்கரையில் வீரட்டானம் என்னும் கோவிலில் வாழும் என் கடவுளே! அப்பா என் தந்தையே!

சமணனாக இருந்த காலத்தில் பட்டங்கள் பதவிகளுடன் இருந்தமை பற்றி இங்கு பேசுகின்றார். தான் பெரிய செல்வந்தராக இருந்தபடியால் பொருளின் பெருக்கால் பல பல வகையாலும் மனைவாழ்க்கையில் உயர்கின்றேன் எனக் கூறுகின்றார்.

நம் பொருள் நம்மக்கள் என்று விரும்பி இச்சை செய்தால் அதற்குற்ற துயரம் அநுபவித்தேயாக வேண்டும். இது யாவராலும் தடுக்க முடியாது. இதனைத்தான் அவ்வினைக்கிவ்வினை என சுகத்திற்குரிய துயரும் இன்பத்திற்குரிய துன்பமும் ஏற்படும் என்பது உணர்த்தியவாறு.

ஆனதினால் வீடுவாசல் மனைவி மக்கள் உத்தியோகச் சிறப்பு இவை யாவும் ஒருவரின் வழிகாட்டல் அல்லது தலைக்காவல் இல்லாதபடியாய் நிகழ்ந்து விட்டது. ஆனதினாலே காவல் இல்லாத காரணத்தால் பழுது பல புரிந்தும் மீள உணர்ந்து உன் திருவடிக்கே ஆளாகி வந்த என்னை கைவிடாது பாதுகாத்தல் உமது கடன்;

இப்பாடலில் தனது சூலைநோயின் கொடுமையால் சோம்பலும் அயர்ச்சியும் கொள்ளும் தன்மை பற்றிக் கூறிடுகின்றார். தனக்கு அந்நோய் எவ்வளவு துன்பம் செய்கிறது. என் பதை பயந்தே என்வயிற்றின் அகம்படியே பறித்துப் புரட்டி அறுத்து ஈர்த்து.

வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன் வஞ்சம் மனமொன்று
மிலாமையினால்
சலித்தாலொரு வர்துணை யாருமில்லைச் சங்கவெண்குழைக் காதுடை
எம்பெருமான்
கலித்தேதென் வயிற்றின் அகம்படியே கலக்கிமலக் கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

எனது மனைவாழ்க்கையில் எம்பிரானே நான் வலிந்து பற்றுடையவனானேன் என் நெஞ்சில் வஞ்சம் இலாமையால். ஆனால் இன்று மனைவாழ்க்கையில் சலித்துவிட்டேன். அப்படிச் சலித்தால் ஒருவரின் துணையாரும் இல்லை; சங்கினால் செய்த வெண்தோட்டின் காதுடைய எம்பெருமானே! ஐயனே கலியின் கொடுமை போன்று என் வயிற்றில் உள்ளாக நின்று என்னைக் கலக்கி மலக்கித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயருறுத்தி என உடம்பைக் கவர்ந்து இன்நோய் என்னைத் தின்றிட ஐயா அநுபவித்து அனுபவித்து அலுந்துப் போனேன். என் செய்வேன் என் குருமணியே! நான் உன் அடியேன் திருவதிகை என்னும் பதியில் கெடிலம் என்னும் ஆற்றங்கரையில் அமர்ந்தருளும் வீரட்டானம் என்னும் கோவிலில் இருக்கும் சுடர்கொழுந்தாயவனே!

இங்கும் மனைவாழ்க்கையில் தான் நன்கு ஈடுபட்டுக் கொண்ட வரலாறும் அது வஞ்சனையாக இல்லை என்றது என்றும் வஞ்சமனம் தன்னிடத்து இருந்ததில்லை எனவும் விண்ணப்பிக்கின்றார்.

யாருடனும் பகையோ பொய்யோ ஏமாற்றோ செய்து தாம் பழகவில்லை என்கின்றார். வஞ்சனையாய மனம் என்றும் இருந்ததில்லை எனக் கூறுகின்றார். எதிலும் சுய நலமான வஞ்சம் ஒன்றும் இருக்கவில்லை என்பது இங்கு திடமாகப் பேசுகின்றார். கடமையைச் செய்ததே அன்றிமேற் கொண்டு ஆசைப்படவில்லை என்கின்றார்.

இன்று மனைவாழ்க்கையில் பற்றுடன் வாழ்ந்து பின்பு சலிப்பு ஏற்பட்டால் ஒருவரின் துணையாதுமில்லை; துணையாவார் யாருமில்லை என்பதும் குறிப்பிடுகின்றார்.

இங்கும் ஆரும் துணையற்ற எனக்கு நீயே துணையாதல் வேண்டுமன்றி வேறென் செய்வேன் என்கின்றார்; இப்பாடலிலும் சூலைநோயின் வேதனை தெரியப்படுத்தப்படுகின்றது. 8

பொன்போல் மிளிர்வதொர் மேனியினீர் புரிபுன் சடையீர் மெலி
யும் பிறையீர்
துன்பேகவ லைபிணியென் றிவற்றை நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
என்போலிக ளும்மை இனித்தெளியார் அடியார்படு வதிது வேயாகில்
அன்பேஅமை யும்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

பொன்போல் மிளிர்கின்றதோர் மேனி உடையீர். புரிபுன்சடையீர். மெலிந்த இளம்பிறை அணிந்தீர். உம் அடியேனுக்கு உற்ற துன்பம் கவலை பிணி என்ற இவற்றை எம்மை அணுகாது கலைத்து இல்லாமல் செய்துவிடுவீராக; அப்படி இல்லையேல் உம்மையே நம்பினோராகும் என் போன்றவர்கள். இனி உம்மைத் தெளியமாட்டார்கள்.

ஏனெனில் எவ்வாற்றாலும் உமக்குஆட்பட்ட அடியார்கள் படுவது இத்துயரமேயாகில் இத்துயரம் அடியேனுக்கு நீக்கப்படாதிருந்தால் தெளியமாட்டார்கள். அன்பே வடிவாய் அமைந்த அதிகை என்னும் பதியில் திருக்கெடிலம் என்னும் ஆற்றங்கரையில் வீற்றிருக்கும் வீரட்டானம் கோயிலில் அமர்ந்த எம்பெருமானே!

பொன்போல் மிளிரும் மேனி சோதிவடிவை உணர்த்தியவாறு அறவாழி அந்தணன் அவன்மேனி பொன் வண்ணம். பொன் வண்ணத்தந்தாதி என்னும் சேரமான் பெருமான் அந்தாதி காண்க. பொன் வண்ணமான மலையைச் சார்ந்த காக்கையும் பொன்னும் அது போன்றதே குறிப்பு. ஊன் கெடினும் உலகு கெடினும் தான் கெடுதல் இல்லாத் தன்மையைக் குறித்தவாறு.

மெலியும் பிறை தக்கன் சாபத்தால் மெலிவுற்ற பிறை அணிந்தவாறு. புரிபுன்சடை முறுகிய திருச்சடை: அதன்மீது மெலிந்த பிறையணிந்தவாறு மெலிவுற்ற பொருளைத் தான் ஏற்றுக்கொண்டவாறு.

துன்பம் கவலை பிணி இவையாவும் நாவுக்கரசர் பெருமானுக்கு அன்று உற்ற சூலைநோயால் ஏற்பட்டன. துரந்து கரந்துமிடீர் என்றது. இத்தகையன ஏற்பட்டால் இவைகளை இல்லாமல் செய்யும் வலிமை சிவனுக்கு உண்டு என விண்ணப்பித்தவாறு.

இனித்தெளியார் என்றது சிவனை நம்பி நின்று தொண்டுசெய்வார்க்கு நோய் வந்தாலும் பின்னர் எவ்வாறு தெளிவு வரும் என்றவாறு. நோயுற்றோர் நோயின் அவதியாலும் துயராலும் இப்படியும் நம்பி வாழ்ந்த எனக்கு இத்துயரம் வரலாமோ என்ற கவலைப் பெருக்காலும் ஏற்படும் சந்தேகங்கள். நம்பித்தான் என்ன பிரயோசனம் என்ற மனவிகாரமே ஏற்பட்டுத் துயருறுத்தும் கவலைப்பெருக்கம். என் நிலையிலும் சிந்தை தடுமாறிச் சிதைவடைய தெளிவு வராது திகைப்பேவரும். மனம் பெரும் அந்தரப்படும். ஆதலால் திருவருள் கைகூடினால் நோய் நீங்கப்பெறும். நோய் நீங்கப்பட்டால் பின்னர் சிவன் உண்டு என்ற தெளிவு பிறக்கும் என்றவாறு. ஆதலாலே நோயினால் துன்பப்பட்டால் தன்போன்ற நிலைஉள்ளோர் இனித் தெளியார் என்றபடி.

அடியார் படுவது இது என்றது: செய்வதுஎல்லாம் சிவனுக்கே தொண்டாக்கி கோவில் திருவீதி செருக்கி வலம் வந்து நீராலும் பூவாலும் நித்லும் வழிபட்டு பிறர்பொருள் எதிலும் பற்றுமின்றி நின்ற பெருமக்களாகிய அடியவர் என்றவாறு.

அன்பே அமையும் என்றது, தன்மீது பற்றுடையார் கொண்ட துயர் கண்டு சகித்திடாத்தன்மை பேசப்பட்டு அன்பே வடிவாக அமைந்த நீ உன் அடியார் துயர் நீக்க மாட்டாயோ என்று கேட்கின்றவாறு; பத்திமையும் அடிமையையும் பேசி அன்பான நீ பார்த்திருக்கத்தகுமோ? இது உன் திருவருளுக்கு ஏற்குமோ என்றவாறு. 9

போர்த்தாயங்கொர் ஆனையின் ஈருரிதோல் புறங்காடுஅரங் காநட
மாடவல்லாய்
ஆர்த்தான்அரக் கன்றனை மால்வரைக்கீழ் அடர்த்திட்டுஅருள் செய்த
அதுகருதாய்
வேர்த்தும்புரண் டும்விழுந் தும்எழுந்தால் என்வேதனை யானவிக்கியிடாய்
ஆர்த்தார் புனல் சூழ்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

எம்பிரானே அங்கு ஓர் ஆனையின் பெரிய உரியாய தோலைப் போர்த்தாய். சுடுகாடே நாட்டிய அரங்காக திருநடனம் செய்திடவல்லாய்; தனக்கு ஒப்பார் யாரும் இல்லை என ஆர்ப்பரித்த இராக்கதனான இராவணனை அன்று பெரிய மலைக்கிழாக வைத்து அடர்த்து நெரித்து பின்னர் அவன் இசைகேட்டு இரங்கி அருளினாய். அதை யாதல் இங்கு நீ கருதாயோ? சூலைநோய் வேதனையால் வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால் இப்படியாகவரும் என் வேதனையானவற்றைத் தீர்த்து இந்த வேதனையாயினவற்றை விலக்கியிடாய்; ஆர்த்து இரைந்தோடும் நீர் சூழ்ந்த அதிகை என்னும் பதியில் ஓடும் கெடிலம் என்னும் ஆற்றங்கரையில் வீரட்டானம் என்னும் தலத்தில் அமர்ந்த எம்பெருமானே!

போர்த்தாய் அங்கு ஓர் ஆனையின் ஈர்உரி என்றது; எல்லாரையும் கொல்லவந்த கயாசூரன் என்னும் யானையினைக் குறித்தவாறு! சிவன் அடியார்கட்கு என்றும் அசுரகுலம் பகையானது என்பது குறித்தவாறு.

சுடுகாடு மக்களால் விரும்பத்தகாத இடமாயினும் அதில் நின்று நடமாடும் வல்லமை இங்கு பேசுகின்றார். மரணித்தாரை சுடும் இடத்தில் சாம்பலைப் பூசி மண்டை ஓடுகளைத் தரித்து நின்று ஆடியருளல் எல்லாப் பயங்களையும் போக்கியவாறு: அழிவின் பின் அருளேயாகிய தன்மையில் புறங்காடு அரங்காக ஆடிடும் வல்லமை பேசப்பட்டது.

ஆர்த்த அரக்கன் என்றது இறவாத வரம்பெற்ற இராவணனைக் குறித்தது. இராவணன் இறவாமையான திடத்தால் கைலைமலையைத் தூக்கி எடுத்திட முயன்றவன். அவனை மலைக்கீழ் போட்டு நெரித்து பின்னர் அருள்செய்த வரலாறு கூறப்பட்டது. பகைகாட்டிய இராவணனுக்கு அருள் செய்த நீ அடியேனுக்கு அருள் செய்திடமாட்டாயோ என்றபடி. இராவணனுக்கு வரமாக முக்கோடி வாழ்நாளும் கொடுபட்ட கருணை பேசுகின்றார். வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால் சூலைநோயின் வேதனை எடுத்துக் கூறியவாறு. இந்த வேதனையை எவ்வாறு தாங்குவேன் என்றபடி. இதனை இனி நிகழாவண்ணம் விலக்கிவிடுவாய் என விண்ணப்பிக்கின்றார். 10

# ஆறுமுகநாவலரை ஓர் சீலமுடைய பெரியவர் என சந்திரதீபம் ஏற்காது

## நாவலர் வழிப் பண்டிதரே நாட்டில் குரோதத்தையும் பகையையும் வளர்க்கின்றனர்

சைவ சமயிகள் எவராக இருந்தாலும் அவர் ஓர் பெரியவராகக் கருதப்படவேண்டின் அவர் நமது பெரியோர் கடைப்பிடித்த எண்வகைச் சீலங்களையும் உடையவராக விளங்க வேண்டும். இந்த சீலங்கள் பற்றி பல தடவை எம்பத்திரிகையில் வலிஉறுத்தி உள்ளோம்.

உண்மையாக ஒரு சைவன் இவபத்தி மிகுந்தவனாக இருந்தால் அவனிடம் சாந்தம் அசிம்சை சத்தியம் புலன்அடக்கம் தயவு ஞானம் தவம் பாவனை என்ற இந்த எண்வகைச் சீலங்களும் தாமாக வந்து பொருந்திக் கொள்ளும். அத்தகைய சைவன் உலகில் நன்மைக்கே வித்தாகி இருப்பானே அன்றி எந்த விதமான தீங்கு நெறியை வளர்ப்பவனாக அல்லது தீங்கு நெறி வளர வித்திடுவானாக இருக்கமாட்டான்.

ஆறுமுகநாவலர் இந்த எண்வகைச் சீலங்களை அநுட்டித்து வந்தவராக அவர் எழுதிய நூல்களைக் கொண்டோ அல்லது அவரது பிரபந்தத்திரட்டுக்கள் கொண்டோ நாம் அவரை ஒரு சீலமுடைய பெரியவர் என்று ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது என்பதை நாம் வெளிப்படுத்த வேண்டியுளது. ஏன் இதில் பிரதான அம்சமாக நாம் இங்கு எடுத்துக் கூறமுயல்வது ஒன்று. என்னெனில் நாவலரை ஐந்தாம் குரவர் என்றும் நாவலர் பெருமான் ன்றும் போற்றி மேடையில் உளறியும் எழுத்தில் வடித்தும் நிற்கும் அவர்வழி சைவம் பேசும் பண்டிதர்கள் நாட்டில் திருநீறுபூசும் மக்களிடையே இனவிரோதத்தையும் பகைமையையும் தூண்டி நிற்கின்றார்களே ஒழிய எங்காகிலும் இந்தப் பண்டிதர்கள் தாங்கள் ஒழுங்காக நடந்து சருமம் பிசகாதவழி நல்வழிகளை பகைநீங்கிய அன்பு வழியை அகிம்சையை சத்தியத்தை பொறுமையை வளர்த்துள்ளதை நாம் இன்றுவரை காணவில்லை.

நாவலர் காட்டிய கண்டனவழியில் நின்று இவர் வழிப்பண்டிதர்களும் கபடத்தாலும் சூழ்ச்சியாலும் தற்பெருமை வித்துவச் சேட்டையின் வித்தகத்தாலும் கண்டனங்கள் பல பல பகைபெருகும் வழி காட்டுகின்றாரேயன்றி எங்காகிலும் ஒரு கோவிலிலோ கல்லூரியிலோ வித்தியாலயத்திலோ பொதுச் சபைகளிலோ மக்களை சமாதானமாக வாழ்ந்து பகைநீங்கி வாழக்கூடிய வழிகளைக் கையாளுகின்றார்கள் இல்லை.

இணுவில் கந்தசாமி கோவிலில் பகைபெருகி கட்சிகள் பெருகி நீ நான் என்று செய்யத்தகாத பலபழிகளைப் பெருக்கக் கண்டு பண்டிதர் பெருமக்களே நீங்கள் தேவசந்தியில் பகைபெருக்கும் செயல்களுக்கு உடந்தையாகி தூண்டிவிடாதீர் என கட்டுரை ஒன்றின் மூலம் செய்தி ஒன்று தெரிவித்தோம். அக்கோவில் இருகட்சியாகப் பிரிந்து கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகளாக வழக்கிலும் வாதாட்டத்திலும் நடந்து வந்துளது. கடவுள் ஒருவன் உண்டு அவனை நாம் மதிப்பதென்றால் அன்பினால் அயலவரையும் அறியாத மக்களையும் நல்வழிப்படுத்தலாம் என்ற எண்ணம் பல படித்த பண்டிதர்களிடம் இல்லாமல் போய்விட்டது. இதனாலே குறுகிய மனப்பாங்கில் அன்பு வழியை மறந்து நேசத்தை வளர்க்காது குரோதத்தையும் தற்பெருமையையும் கல்விமான்கள் தம்மில் பெருக்கியவுடனே தமிழ் இனம் ஒற்றுமை நீங்கி பிரிவுபட்டு வீணை தமது காலத்தையும் பணத்தையும் வழக்கில் செலவழித்திட வேண்டி வந்தது.

பெரிய புராணத்து சேக்கிழார் தணிந்த மனத்திருமுனிவர் என சிவகோசரியாரை வர்ணிக்கின்றார்; தணிந்த மனத்தில் ஆவேசம் இல்லை கொதிப்பு இல்லை பொறுமை அழுக்காறு தற்பெருமை இவைகள் இல்லவே இல்லை. தவறுகளைத் தானும் சமம் நீங்காத அன்புவழியிலே நன்கு இடித்துரைப்பாரேயன்றி கட்சி கட்டி நின்று போராடி வழக்காடி தம் கொள்கையை நிலைநாட்ட எப்பெரியவரும் இறங்கார்.

எந்த அறிவாளியும் ஏதும் தவற்றை அறிவிக்கும் வகையில் தன் கொள்கைக்காக வழக்காடச் செல்லான். கோட்டில் சென்று சைவத்தின் பேரால் வழக்காடுதல் மேன்மையான செயல் அன்று. தெய்வ நம்பிக்கை உடையவர் செய்யமாட்டார். ஒரு கோயிலில் தாம் செய்யும் தொண்டிற்கு இடையூறுவரின் அப்பொழுதும் அவர் வழக்கினமேல் செல்லார்;

பெரிய புராணத்து மூர்த்திநாயனார் புராணத்தை நாம் விளங்கினால் எமது முன்னைப் பெரியோர் தமக்கு வரும் இடையூறுகளை எவ்வாறு நீக்கிக் கொண்டார் என்பது புலப்படும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமக்களின் பெருமை அவர்கள் மேற்கொண்ட சீலங்களே அன்றி வேறு பெருமைகள் நாம் காணவில்லை. உண்மை உணர்ந்த சைவன் வெற்றி தோல்வி கட்சி இவற்றிற்கு அப்பால் நிற்பான்.

உண்மை என்றும் அழியாது. அது எப்பவோ உறுதிப்படுத்தப்பட்டது. ஆதலினாலே உண்மை நீங்கினால் பின்னர் கபடமே நெஞ்சில் குடிகொள்ளும். கபடம் வந்தவுடன் கட்சியும் வந்திடும் இந்த விதத்திலே நாட்டில் கோவில் என்றாலும் அதை மதியாது துர்அபிமானமே பெருகி நிற்கும்.

இணுவில் கிராமம் இந்த வகையான கட்சிப் பூசல்களால் மலிந்து வழக்கும் வாதாட்டமுமாக வந்து விட்டது. நாம் எம்பத்திரிகையில் சுட்டிக் காண்பித்தது போல் பண்டிதர்களே இந்த கட்சிப்பூசல்களைப் பெருக்கி இனப்பிரிவை ஏற்படுத்தி பொதுவாக எந்தக் கிராமத்திலும் நடைபெறும் கட்சிப் பூசலுக்கு இவரே பொறுப்பாளியாக உள்ளனர்.

நாவலர் வழிச் சைவர் நாங்கள் நாவலரே எங்கள் கடவுள் சமயம் காத்தவர் என்ற பேச்சில் இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலய வரலாறு பற்றி பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் மா. ந. பரமேஸ்வரன் இ. விக்கினேஸ்வரன் ஆகிய மூவரும் சேர்ந்து வரலாற்றுப் பத்திரம் எனும் சஞ்சிகை வெளியிட்டுள்ளனர்.

இந்த சஞ்சிகையை எடுத்துக் கொண்டு இணுவிலில் உள்ள நன்மையும் சமாதானத்தையும் உண்மை நெறிகளையும் வளர்க்க விரும்பும் மக்கள் சந்திரதீப வளாகத்திற்கு வந்து அச்சஞ்சிகையைக் காண்பித்து நீங்களும் பேப்பரில் எழுதுறியள் இந்தப் படித்த பண்டிதர்கள் ஊரைப் பிளவு படுத்தும் வேலையைப் பாருங்கள் என்றனர்.

அதை வாங்கி வாசித்தேன். வாசிக்கும்போது பண்டிதர்கள் எச்சில் இலையில் கல்லுத்தெரித்தல் போன்று ஏதோ ஆறுமுகநாவலர் பேரில் ஆரம்பித்த பாடசாலை வேறு ஆரோ அம்பிகைபாகர் பேரில் வந்திட்டது என்ற ஆத்திரத்தை சொல்களால் வளாசித்தள்ளி விட்டனர். நாவலர் ஆரம்பித்தால் என்ன அம்பிகைபாகர் நடத்தினால் என்ன அதனால் பாடசாலை பழுதடையவில்லை. பாடசாலை இன்றும் மகாவித்தியாலயமாகவே இருக்கிறது.

இதில் பண்டிதர் ஆராய்ச்சிகட்கு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த துணைநூலகர் ஆ. சிவநேயச் செல்வன் எம். ஏ. வை. ஆறுமுகம் எம். ஏ. ப. சந்திரசேகரன் எம். ஏ. கலாநிதி அ. சண்முகதாஸ் ஆகியோரும் சைவபரிபாலன சபை வழக்கறிஞர் நிம. சிவப்பிரகாசம் நிர்வாகக் காரியதரிசி ரி. எஸ். பொன்னையா சைவ வித்தியாவிருத்திச் சங்க முக்கியஸ்தர் சி. மு. அப்புத்துரை இணுவைக் கவிஞர் ஆ. க. செல்வநாயகம் அ. திருமுருகன் கா. விவேகானந்தன் நந்தாவில் சுப்பையர் பரம்பரை கோண்டாவில் ஐ. சின்னத்துரை நீர்வை அ. சிதம்பரப்பிள்ளை சைவப் புலவர் இ. செல்வத்துரை ஆகியோர் இப்பண்டிதராகும் மூவரின் வரலாற்றுக்கிண்டல்களுக்கு உதவித் தொண்டு புரிந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் அடிவாங்கி உதை வாங்கி எரிபட்டு சுடுபட்டு பல தடவை ஓடி ஓடி அகதிமுகாங்கள் புக இந்த வரலாற்றுக் கிண்டல் தற்போதைய அவலநிலையில் கவலை நிலையில் என்ன பலன் வருவிக்கும். இதைக் கிண்டும் பண்டிதர் உணர்வாரா?

நாவலர் பேரில் திரும்பவும் பாடசாலை பெயரிடப்பட்டால் அடியும் உதையும் நிற்குமா? நாவலர் இவ்வளவு தூரம் கண்டனம் எழுதி கடைசி முடிவாக இக்கண்டனங்கள் நாட்டில் என்ன பலனைத் தந்துவின. அல்லது நாவலரின் ஆன்ம ஈடேற்றத்திற்காதல் என்பலன் செய்தன.

சந்திரதீபத்தை பலரும் இன்று இகழுகிறார்கள். படித்த பண்டிதர் கூட்டம் சந்திரதீபத்தை நன்கு இகழுகின்றது. இந்தக்கதி நமக்கு மட்டுமல்ல நாட்டு மக்களுக்கு நன்மையே சொல்லப்புகுந்த நாயன்மார் அனைவர்க்கும் ஏற்பட்டது அவர் அவர் வாக்கால் உணருகின்றோம்.

மாணிக்கவாசகர் ''நாட்டார் நகைசெய்ய நாம் மேலைவீடெய்த'' என்றும்; திருநாவுக்கரசர் ''என்னைப் படைத்திலையேல் இடும்பைக்கு புக இடம் யாது சொல்லே'' என்றும், திருஞானசம்பந்தர் ''பித்துறமயங்கி ஓர் பிணிவரினும் அத்தா உன் அடியலால் அரற்றாது என்நா'' என்றும் சுந்தரர் பெருமான் கூழைமாந்தர் தம் செல்கதிப்பக்கம் போகமும் பொருள் ஒன்றறியாத ஏழையேன் என்றும் பலவாறாக உண்மையை உலகிற்கு எடுத்துச் சொல்லப் போன தங்களை உலகம் எவ்வாறு மதித்துள்ளது என்பதை வெளிப்படக் கூறி விட்டனர்.

இதே போன்றுதான் சந்திரதீபமும் சிவன் அருள்வழியை எல்லையாகக் கொண்டு அன்பு நெறியையும் அருள்நெறியையும் எடுத்துக் கூறி எல்லோரும் இன்புற்றிருக்கும் ஓர் மார்க்கத்தை தெரிவிக்கிறது.. நால்வர் பெருமக்களின் திருப்பதிகளைப் பிரசுரித்து அவர் திருவடி தொழுது உண்மையை எடுத்துக்கூறுகின்றது.

ஆறுமுகநாவலரின் கண்டனம் வழிவேறு நாம் செய்யும் பணிவேறு நாம் தமிழ் மக்களிடையே எழும் கருத்து வேற்றுமைகளைக் களைந்து கட்சி கட்டி நிற்பதை விடுத்து இறைவன் பணியில் உண்மை வழி நிற்போம். எம்முன்னோர் காட்டிய அறவழியில் கோவில் சென்றால் நாம் ஏகப்பட்ட அன்புருவமாவோம். நீ நான் என்ற கோதாவில் பெருமை சிறுமை பாராட்டாது அன்பினால் இன்பம் பெறுவோம் என்றதே சந்திரதீபம் காண்பிக்கும் வழி.

ஆறுமுகநாவலர் நமக்கு முக்கியமன்று. நமக்கு முக்கியம் அறவோர் எனப்படும் அந்தணரும் தொண்டர் என்ப்படும் அடியார்களும். கோவிலில் களவு பொய் ஏமாற்றம் காமாதி குணங்கள் கட்சிபேதம் இவையாவும் இன்றி மேன்மையான நம் சைவ நீதியை வளர்த்திட வேண்டும் என்பதே நோக்கம்.

இன்றைய பண்டிதர்களும் வித்துவான்களும் கரவு என்னும் உள்ளத்துள் தேங்கி அதனின்றும் விடுதலை பெறமுடியாதவராய் கோயில் எங்காகிலும் ஏற்படும் சில குழப்பங்களைத் தூண்டி விடுதற்கு யாருமில்லாதிருந்தாலும் ஒரு தமிழ் சட்டம்பியார் அந்தப் பெரும்தொழிலாய பிரிவினைகட்சி ஏற்படுத்தும் தொழிலில் இருப்பார்.

நாம் அறிய பல தமிழ் பண்டிதர்கள் நாயன்மார் காட்டிய அறவழிகளைப் புறக்கணித்து தம் இஷ்டப்படி நடந்துவிட்டு அது நாவலர் வழி என்று சொல்லுகின்றார்.

தமிழ் இனம் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்றால் முதற்கண் யாவரும் மனிதரை மனிதனாக மதிக்கும் பழக்கம்பெற வேண்டும். பிழையை பிழை என ஏற்கும் பழக்கம் வேண்டும். தம்மில் உள்ள குற்றத்தைத்தான் ஏற்றல் தனக்கு அவமானம் என்று எண்ணக்கூடாது.

நமது பத்திரிகை நடந்து நாலு ஆண்டுகளாகின்றன. இந்த நாலு ஆண்டுகளில் இது காறும் இலங்கையில் உள்ள எந்தக் கோவில்களில் நடந்துவந்த அல்லது நடைபெற்று வந்த பழுதுகளில் 25 சதவிகிதமானவையாதல் குறைந்து எம்பெருமானுடைய இருப்பிடங்கள் தூய்மை பெறும்படி நிலைநாட்டி உள்ளோம்.

அப்படி இருந்தும் உணர்ந்தும் திருந்தமாட்டாத பல கோயில்கள் உள்ளன அவைகளும் நாள் அடைவில் தம்தம் பிழை உணர்ந்து இறைவன் திருவருளால் உண்மை கடைப்பிடிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இந்த உலகில் எழுத்துச் சுதந்திரம் எல்லோர்கரும் உண்டு. ஆனால் எழுத்துச் சுதந்திரம் ஓர் இனத்தில் பகைப்பெருக்கையும் குரோதத்தையும் வளர்த்தல் கூடாது. அப்படி எழுத்துச் சுதந்திரம் பிரிவினைக்கும் கட்சிக் கொள்கைக்குமாக நின்றால் நாட்டில் தமிழ் இனத்தில் என்றும் ஒற்றுமை வளராது.

அதனாலே பண்டிதர் அவர்கள் தங்கள் கல்வித் திறனையும் வித்துவச் சிறப்பையும் எழுத்துமூலம் எழுதுவதிலும் நல்நெறியாய சீலங்களுடன் ஒழுகி எம்நாட்டில் தவமும் தருமமும் தழைத்து அதன்மூலம் தமிழ் இனம் சுதந்திரமடைய வழி காண்பார் என நம்புகிறோம்.

## கத்தோலிக்க குருமார் ஆனைக்கோட்டை உயரப்புலம் பழம்பிள்ளையார் கோவில்மேல் சீற்றம்

பழங்காலம் தொட்டு ஆனைக்கோட்டையில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் கோவில் கத்தோலிக்க சமயத்தை தழுவும் மக்கள் மத்தியில் இருந்தது. தற்பொழுது அக்கோயில் திரு. முதலி அவர்களின் நன்முயற்சியால் புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் ஆகியது. இப்பிள்ளையாரின் அற்புத மகிமை உணர்ந்த கத்தோலிக்க மக்கள் பலர் இக்கோவில் சென்று வழிப்பட்டு உபயங்களிலும் பங்கு கொண்டு வந்தனர்.

இதனை உணர்ந்த ஆனைக்கோட்டை உயரப்புலம் கத்தோலிக்க மாதா கோயிலைச் சேர்ந்த குரு ஆத்திரப்பட்டார். அவர் அங்குபோன மக்கள்மீது ஆத்திரப்பட்டு சாத்தானுக்குப் படைத்த உணவை நீங்கள் உண்ணக்கூடாது எனப் போதித்தார். ஆனைக்கோட்டை மாதாங் கோயில் பாடசாலையில் படிப்பிக்கும் சில பெண் ஆசிரியைகளைக் கொண்டு அங்கு போன சிறுவர்களுக்கு அடியும் வாங்கிக் கொடுத்தார். மற்றும் அங்கு போகும் மக்களுக்கு குற்றமும் அடிப்பேன் எனப் போதனை செய்கிறாராம் அந்த கத்தோலிக்க குரு.

தெய்வம் என்பது ஒன்றுதான் எனத் தெளியாத மூடநம்பிக்கைகளால் நம் தமிழ் இனத்து தெய்வ வேறுபாடு காணும் கத்தோலிக்க குரு இனி என்ன சொல்வாரோ தெரியாது.

எம் நாட்டில் சமயத்தின் பேரால் பிரிவினைகளையும் இன ஒற்றுமைகளையும் கெடுக்கும் கத்தோலிக்க குரு பீடம் ஏன் மக்கள் மத்தியில் சைவக் கோயிலில் இருக்கும் தெய்வம் சாத்தான் எனப் போதிக்கின்றது.

இயேசுநாதர் தம் போதனையில் எங்காகிலும் ஒரு வழிபாட்டு இடத்தை சாத்தான் என நித்திக்கும்படிகூறி இருப்பாரா? திருவாசகத்தை போப் ஐயா ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பாரா? தனிநாயகம் அடிகள் திருமந்திரத்தை வாழ்வின் நலனிற்கு மேற்கோள் காட்டுவாரா? இதை எல்லாவற்றையும் கத்தோலிக்க குரு பீடம் சிந்திக்கட்டும்.

மீண்டும் கத்தோலிக்க குருமாரிடம தமிழ் மக்களிடம் ஆட்டுமந்தை அடைக்கும்வேலையைக் கைவிட்டு தமிழினத்து பிரிவினை உண்டாக்காதிருக்கும்படி சந்திரதீபம் கேட்கிறது.

## அல்லாரை இந்து சமய வளர்ச்சிக் கழகம் சந்திரதீபத்திற்கு வாழ்த்துச் செய்தி

கொக்குவிலிலிருந்து வெளிவரும் சந்திரதீபம் என்னும் பத்திரிகையைப் பலமுறை வாசித்துள்ளோம். நாம் இதில் எத்தனையோ நல்ல கருத்துக்களைக் கண்டு ஆவலோடு படித்துள்ளோம். இக்கருத்துக்கள் எதிர்காலத்தில் ஆலயங்கள், அங்கு பூசை செய்யும் பூசகர்கள், சமயக் கிரியைகள், இவற்றிலிருக்கும் குறைபாடுகள், அவற்றை நிவிர்த்தி செய்ய எடுககவேண்டிய நடவடிக்கைகளை நன்கு எடுத்து இயம்புகின்றன. இப்பத்திரிகை மேலும் வளர்ச்சியடைந்து இலங்கை பூராவும் அன்றிச் சைவ மக்கள் வாழும் அகில உலகிலும் பரவவேண்டும்.

அக்கிரமங்கள் தோன்றிய காலங்களில் இறைவனே அவதாரம் எடுத்து அவற்றை நிக்கிரகம் செய்திருக்கின்றார். ஆகவே இறைவனே தோன்றினாற் போலவே இப்பத்திரிகை மிளிர்கின்றது.

இது என்றும் மலர அல்லாரை வாழ் இந்துக்கள் வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றோம்.

ஆலயம் என்பது ஆன்மாக்கள் சென்று லயிக்கும் இடம். அதற்கு வழிபாடு அவசியம், வழிபாடு உண்மையில் நிகழ வேண்டுமாயின் அமைதி இன்றியமையாது வேண்டப்படுகின்றது. இதற்குப் பதிலாக இக்காலத்தில் ஆலயமே ஊர்ப்பிரச்சனைகளைக் கலந்தாலோசிக்கும் மத்திய இடமாக மக்கள் கருதுகின்றார்கள். பெற்றாரைப் பின்பற்றும் ஊக்கம் பிள்ளைகளிடம் இயல்பாக உள்ளது. வருங்காலச் சந்ததியாக வருவது தற்காலப் பிள்ளைகளே. பிள்ளைகள் நன்கு பயிலப் பெற்றார், பெரியோர்கள் ஆலயத்தில் அமைதி நிலவ உதவ வேண்டும். ஆலயத்தில் அதன் சூழலில் அமைதி நிலவவேண்டுமானால், வழிபாட்டிற்கே மக்கள் அங்கு வர வேண்டுமானல் அங்கு வேறு நோக்கங்களுக்கு இடமில்லாதிருத்தல் வேண்டும். உதாரணமாக கேளிக்கைகள் ஆலயத்தில் நடைபெறுவது தவிர்க்க வேண்டும். வழிபாடே முக்கிய நோக்கமாக விளங்கும் ஆலயத்தில் ஒரு சிலர் உழைப்பே முக்கிய நோக்கமாக்குகின்றார்கள். இவர்கள் தடைசெய்யப்படல் வேண்டும்.

இவற்றை உணரவைக்கும் உங்கள் பத்திரிகை கபடத்தை அப்பட்டமாக்கி மக்களை விளிப்படையச் செய்கின்றது. மேன்மேலும் இது போன்ற அரிய கருத்துக்களை வெளியிடுவீர்களாக.

இங்ஙனம்
அல்லாரை ஊர் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலபுராணங்களையும் நீதியிலாத பொய்க்கதைகளையும் சைவமக்கள் நிராகரிக்கவேண்டும்

## அருளும் அன்பும் போதிக்கும் கந்தபுராணத்தைப் பெரியபுராணத்தைவிட ஏனையவை யாவும் பொய்மையே பேசுகின்றன

எமது சைவநெறியில் பெரும் பழுதுகளை விளைவிக்கும் ஒரு இலக்கியமாக இருந்தால் அல்லது புராணமாக இருந்தால் அவை புறநானூறு, மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களும். திருவிளையாடற்புராணம் திருச்செந்தூர்ப்புராணம், சிவராத்திரி புராணம், உபதேச காண்டம் போன்ற பல புராணங்களுமாகும்.

எமது சைவநெறிஉண்மையற்று நெறியற்று பொய்யாலும் வஞ்சனையாலும் பீடிக்கப்பட்டு இருப்பதற்கு இந்தத் தலபுராணங்களும் இலக்கியங்களுமே காரணமாகும். மயிலாடல் அதைக்கண்ட வான்கோழி தானுமாடியது போல் சேக்கிழாரும் கச்சியப்பரும் அருளால் புராணம்பாட அதைக்கண்ட புலவர்கள் மன இருளால் பல உண்மையற்று நடவாத செய்திகள் சேர்ந்த புராணங்களைப் பாடித்தள்ளியுள்ளார்கள். அருளுடன் கலந்த பாடல்களும் மன இருள் கலந்த பாடல்களுக்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு. அருளால் எழுந்த சிந்தை அல்லது அதனின் துணைகொண்டு பாடிய பாடல் ஓதுவாருடைய மனத்தை அருளுடன் கலக்கப்பண்ணி மனதில் இயல்பில் எழக்கூடிய காமம், குரோதம் முதலியவற்றை அகற்றும். பல கொலைகள் செய்து வெற்றிபூண்ட ஓர் அரசனைப் புகழ்ந்துரைக்கும் ஓர் பாடல். அதை ஓதுவாருடைய உள்ளத்தில் கொலைக்குரிய சிந்தனையை ஊக்குவிப்பதேயன்றி அன்பு அருளுக்குரிய சிந்தனையை வருவியாது.

பெரும்பாலும் தலபுராணங்கள் யாவும் பொய்க்கதைகளின் கற்பனையே! அதில் உண்மையில்லை. உதாரணமாகத் திருவிளையாடற்புராணத்தை எடுத்துக்கொள்வோம். அதில் ஒருவன் தனது தாயைக் கற்பழித்து தந்தையைக் கொலைசெய்து களவு பல செய்தவன் வீடுபேறடையச் சென்றானாம். அவன் மாபாதகனாம்.

அவனை மதுரைக் கோவிலின் கோபுரமேல் அம்மையுடன் இருந்த சிவபெருமான் கண்டாராம். கண்டு உடனே அப்பாதகனுக்கு அருள்புரிந்தாராம். பாதகன் பழிதீர்ந்தானும். பக்கத்திருந்த அம்பாள் கேட்டாளாம். சுவாமி இந்தப் பாதகனையும் நீர் பழிதீர்ப்பதோ என்று. உடனே சுவாமி சொன்னாராம். ஓம் இவனுக்கு பழிதீராமல் வேறு யாருக்குப் பழிதீர்ப்பது என்று. ஆதலினாலே ஒருவன் இந்த உலகில் தாயைக் கற்பழித்து தந்தையைக் கொலைசெய்தவர் யாவரினும் பழியைச் சிவபெருமான் கண்டால் தீர்ப்பாரா? இப்படியான பல பொய்க்கதைகளைப் புனைந்துரைத்து புராணம்செய்தால் அது சைவமக்களை நலமுற வைக்குமா?

எமது நாயன்மார் எல்லாரும் பொய்யை நீக்கிடவே சொல்லினார்கள். எங்காகிலுமோர் இடத்தில் நீங்கள் எல்லாப் பாவத்தையும் செய்யுங்கள். சிவபெருமான் உங்கட்கு அருள்செய்வார் எனச் சொன்னவரோ?

எல்லாப் பழியிலும் பொல்லாதது கொலைப்பழி! அதுவும் ஒரு உயிரைக் கொலை செய்தால் அதனால் பெருக்கூடிய துன்பத்தை யாரும் நீக்கமுடியாது. எந்தக் கடவுளும் நீக்கமுடியாது. அதை நாம் உணரவேண்டும்.

கொலையை உலக மக்களின் நலன் பொருட்டு நீதிமூலம் தீர்த்திட அரசாங்கத்திற்கு மட்டும் உரிமை உண்டு. அதை அரசன் செய்ய வேண்டும் என நீதி நூல்கள் சொல்கின்றன. உலகத்து தருமத்தை நிலைநாட்டும் பொருட்டு அதர்மம் அழித்திடவே வேல் சக்கரப்படைகள் தோன்றின. இவை காலங்கடந்த அத்தமானவை.

வேற்றுமரனுக்கு அன்பிலாதவர் ஞானம் மிகவும் நன்றே என்கின்றார் அருணகிரியார். ஒருவன் உள்ளத்தில் அதர்மம் அழிதற்கு வகையாகவே வேல்வைத்திருக்கிறான் முருகன் என்பதை நாம் உணரவேண்டும். ஆதலினாலே அதர்மம் செய்வார் என்றேனும் ஒருநாள் அழிவார் அவர் உய்யார். அதை நம் சைவ மக்கள் உணரவேண்டும்.

ஆனதன்மையினாலே சைவமென்பது பொய்யான கதைகளைப்பேசிப் புரளிசெய்வதல்ல. உண்மை வரலாறுகளை உண்மையாகும்படி அன்பும் அறனும் கலந்தமுறையில் எடுத்துப் போதிப்பதுதான் சைவம். இதை விடுத்துப் பல பொய்யையும் சேர்த்துப் புராணம் பாடியுள்ளார் பல நூற்றாண்டுகளாக. இப்படியான நிலையில் காலத்தைப்போக்குவதே காலாட்சேபமாகப் பின்னடியில் வந்துவிட்டது.

பிறவியில் காலம் பெரிதாகக் கருதப்படுகிறது. நாம் வீண் போக்கும் காலத்தைத் திரும்ப நாம் பெறமுடியாதென்பது ஒரு உண்மையாகும். பொய்வழியில வீணபோக்கிய காலத்துக்கு ஈடாக எத்தனைதரம்தான சிவ சிவ எனச் சொன்னாலும் அந்தச் சிவ சிவ எல்லாம வீண்போக்கிய காலத்தினால் அவமாகிப் போகுமேயொழிய நன்மைபயக்காது. இன்றைக்கு கிருபானந்த வாரியார் பரமாச்சாரியார் தங்கம்மா சீர்காழிகோவிந்தராஜன போன்றோர் தம்வாழ்வில பொய்மையைப் பெருக்கவந்தார்களை தவிர மெய்மையாகிய உண்மை நிலைக்கு வரவில்லை.

மடங்களும் மடாதிபதிகளும் செய்துவருகின்ற அட்டூழியங்கள் எண்ணிலடங்காதவையாகும். மடாதிபதி ஒருவர் சிவிகையிலே பவனிவரும்போது அவர்முன்னால விபரமறியாத ஓர் ஏழை மனிதன் குறுக்கே ஓடவும் அதைக்கண்ட மடாதிபதியின் கட்டியக்காரர் உதைந்த உதையில் அந்த ஏழை முள்ளுக்கம்பி வேலிகுள் விழுந்து பரிதவித்ததைக்கண்ட திருநெல்வேலியைச் சார்ந்த ஓர் ஆசிரியர் எம்மிடம் தெரிவித்தார். பொய்யான வரலாறுகொண்ட தலபுராணங்களைப் பாடுவித்து அதனால் தங்கள் புகழையும் பெருமைகளையும் படைத்துக் [illegible] மடாதிபதிகள் [illegible] றார்கள்.

ஆகையினாலே உள்ளத்தில் உண்மைவிளங்க வேண்டுமாகில் பொய்யான புரளிக்கதைகளைக் கடவுள்பேரிற் பாடிட அதைக் கேட்டு மகிழ்ந்திடல் பாவத்தின் பேற் பாவமாகும். ஆதலினாலே உங்களுக்கு நன்மைவிளங்கவேண்டுமென்றால் நாயன்மார் காட்டியவழியில் நன்மையைக்கடைப்பிடித்து சிவராத்திரிபுராணம் திருச்செந்தூர் புராணம், திருவிளையாடற்புராணம், உபதேச காண்டம் இவைபோன்ற பல புராணங்களையும் ஓதுதலைத் தவிர்க்கவேண்டுமென்பது எமது கருத்தாகும்.

# மூத்தநயினார்கோவில் நிர்வாகம் சீர்கேட்டையே விரும்புகிறதா?

ஆனைக்கோட்டையிலே எண்ணெய் விற்கும் பெண்ணொருத்தி தனதுவியாபாரத்தை முடித்துக்கொண்டு கல்வியங்காடு என அழைக்கப்படும் கள்ளிப்பத்தைகள் நிறைந்த இடத்தால் வந்துகொண்டிருக்கும்பொழுது 'என்னையும் கொண்டுபோ' என்ற சத்தம் வெகுநாளாகக் கேட்டுவருவதை அவதானித்து சத்தம்வந்த கள்ளிப்பத்தையடிக்குச் சென்று பார்த்தபொழுது ஒரு பிள்ளையார் விக்கிரகம் அனாதரவாகக் கிடக்கக்கண்டு தனது எண்ணெய்க் கடகத்தை இறக்கிப் பிள்ளையார் விக்கிரகத்தை அக்கடகத்துள் வைத்துக்கொண்டு தற்பொழுது மூத்தநயினார் ஆலயம் இருக்கும் இடத்திற்கு அண்மையில் உள்ள ஒரு சிறு பொய்கையில் எண்ணெய்க் கடகத்தை இறக்கிவைத்துவிட்டு அப்பொய்கையில் கால்முகம் கழுவிவிட்டுத் திரும்பிவந்து கடகத்தைத் தூக்கியபொழுது கடகம் மிகவும் பாரமாக இருப்பதைக்கண்டு விக்கிரகத்தை வெளியே எடுத்துவைக்கவும் விக்கிரகம் அந்த இடத்திலேயே நிலைத்துவிட்டதாகவும் அவ்வழியால் செல்லும் நமசிவாயம் என்பவரது கனவில ஒருநாள் மூத்தவிநாயகர் தாம் இருக்குமிடத்தைக் காட்டியதாகவும் அதைக்கண்டு அதிசயித்த நமசிவாயம் அடுத்தநாள் அவ்விடம் வந்து விக்கிரகத்தைப் பார்த்துத் தரிசித்துவிட்டுக் கொழும்புக்குச் சென்றதாகவும் அங்கு அவர் கப்பல் வியாபாரத்தில் அதிக பணம் சம்பாதித்ததாகவும் பின் மானிப்பாய்வந்து தமது வீட்டில் சயனித்திருக்கும் வேளை 'அடே நமசிவாயம் என்னை மறந்துவிட்டாயா?' என்று கனவிலதோன்றிக் கேட்டதாகவும் அடுத்தநாள் நமசிவாயம் அவர்கள் அவ்விடத்தையடைந்து அவ்வூர் மக்களுடன் கலந்துரையாடும்பொழுது எத்தனையோபேர் தங்கள் நிலங்களைக் கோவிலுக்கு நிந்தகமாக அர்ப்பணித்ததாகவும் அந்த ஊரவர்கள் கொடுத்த காணிகளின் ஒருபகுதியிலேயே மூத்தநயினார்கோவில என அழைக்கப்படும் 'பாலசுப்பிரமணியர் கோயில்' இப்போது காட்சியளிப்பதாகவும், அந்த மூத்தநயினாரின் கடாட்சத்தால் பெரும்பொருள் சம்பாதித்த நமசிவாயம் அவர்களுக்கு அவரின் சமூகத்தொண்டை மெச்சும்வகையில் அப்போதைய ஆங்கிலேய அரசாங்கம 'முதலியார்' என்னும் பட்டத்தைச் சூடியதாகவும், தமக்குப் பெரும் புகழும் பெரும்பணமும் தேடித்தந்த மூத்தநயினார் ஆலயத்தை நமசிவாய முதலியார் முன்னின்று ஒப்பேற்ற அவ்வூர்மக்களும் தம்மாலியன்ற பொருள் பண்டம் காணி முதலியவை கொடுத்துதவியதாகவும் நமசிவாய முதலியாருக்கு 'ஈஸ்ரேர்ன் பாங்க்' என்ற பெயரில் ஒரு காசு நிறுவனம் இருந்ததாகவும் அதை யிட்டு நாத்தாண்டியாவில் ஒரு தென்னந்தோட்டத்தை உண்டாக்கி அது செழிப்புற்று நல்ல ஆதாயத்தைக் கொடுத்துவருவதாகவும் அது தற்போது பாலசுப்பிரமணியரின் சொத்தாக இருப்பதாகவும், நமசிவாய முதலியார் பாலசுப்பிரமணியசுவாமி கோவிலில் [illegible] நடைபெறும்பொருட்டு அதன்வரும்படியைச் செலவழிக்கும்படி எழுதிவைத்துள்ளாரெனவும் அந்தத்தென்னந்தோட்டத்தில் விழும் தேங்காய்களை விற்பதனால்வரும் வருவாயே மூத்தநயினார் ஆலயத்தை திறம்பட நடாத்த முடியும் என்றும் ஒருகதை மக்கள் மத்தியில் உலாவி வருகிறது.

அப்படியிருக்க மூத்தநயினார் ஆலயத்துக்கருகாமையில் கடைகளை அமைத்துக் கொடுத்து நிர்வாகம் பணம் பெறுவதாகவும் அக்கடைகளினால் சிலவேளைகளில் பாலசுப்பிரமணியருக்குத் தலைவலி ஏற்படுகிறதென்றும் சிலர் சொல்லவும் கேட்டிருக்கிறோம்.

அந்தப் பாலசுப்பிரமணியர் ஆலயம் அமைந்திருக்கும் இடத்தை ஒரு புனித இடமாக நிர்வாகம் பிரகடனப்படுத்தி ஆவனசெய்வதை விட்டு மேலும் மேலும் அவ்விடத்தை வியாபாரத் தலங்களுக்கும் விளையாட்டு மைதானங்களுக்கும் இடமாக்குவதால் சைவத்தின் மேன்மை குன்றிவிடுகிறது. இனிமேலாகுதல் பாலசுப்பிரமணியர்கோவில் நிர்வாகத்தார் அதைஒரு புனிதஇடமாக ஆக்கும்பணியில் ஈடுபட்டு நாட்டுக்கும் அவ்வூர் மக்களுக்கும் சைவத்திற்கும் அதைச்சார்ந்தவற்றிற்கும் நன்மைசெய்வார்களென நம்புகிறோம்.

ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோயில முகாமையாளரும் அவரைச் சார்ந்தபலரும் என்னைத் துன்புறுத்த எத்தனிக்கின்றார் என்றும் என்னை அவ்வீதியால் போகவேண்டாம் என்றும் எச்சரித்துள்ளனர். இச்செயல் சென்ற சந்திரதீபத்தில் வந்த அக்கோயிலைப்பற்றிய செய்தியின் பிரதிபலிப்பெனக் கூறினர்.

மேற்படி கோயில் முகாமையாளரிடம் கோயில்வீதியில் படிப்பதற்கு குடைகள் கொடுத்து ஒலிபெருக்கி பாடுதல், மண்டபத்தில் நாயும் புலியும் விளையாடல், மக்கள் கூடியிருந்து வீண்கதைகள் பேசல் இவையாவும் நீக்கப்படவேண்டுமென்றும் கோயில் வீதி ஒரு விளையாட்டு மைதானமல்ல வியாபார நிலையமுமல்ல: இப்பொழுது இக்கோயிலில் நடக்கும் செயல் அக்கோயிலின் புனிதத்தைக் கெடுக்கின்றன. அவற்றை நீக்கிவிடுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் நீங்கள் சொல்வது சரிதான்: மெல்ல மெல்லமாக அவற்றையெல்லாம் நீக்கப்போகின்றேன என்றார். இந்தச் சொல்லிப் பலகாலமாகியும் முகாமையாளர் இவற்றைச் செய்யவில்லை. உண்மையில கோயிலில் அக்கறை கொண்டிருந்தால் இவைகளைச் செய்திருப்பார். செய்யாமல விட்டதற்குக் காரணம் அக்கோயில எப்படிப் போனாலும் அக்கோயில்மூலம் தனக்கு வருவாய் வந்தால்போதும் என்பதைக் கருதிக்கொண்டாரோ எனும் என்பது எனமனதில் பட்டுச்கொண்டது.

அடுத்து உண்டியற்காசையும் திறந்தெடுத்த ஒருநாள் அக்காசுடன் நேராக ஒரு சந்தைக்குச்சென்ற அவர் ஒரு தூய சைவன போகவிரும்பாத இடத்துல அவர் போய்நிற்கக் காணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டார் என்ற செய்தியை அக்கோயிலைக் கும்பிடும் ஓர் இளைஞர் தெரிவித்தார். ஆதலினாலே இச்செய்தியும் இக்கோயிலை ஒர் புனிதப் பிரதேசமாய் எண்ணுகின்றார் இல்லை என்பதை வலியுறுத்தியது.

கோயிலின் புனிதத்தைக் கெடுத்துப் பந்தாடிச் சினிமாப் பாட்டுப் பாடி எச்சில் துப்பிப் பல அசிங்கிதமும் செய்பவர் தாம் செய்கின்ற தவறை உணராமல் பின்னரும் என்னோடு கோவிப்பதாக இருந்தால் இந்த மூத்தநயினார்கோயில் நிர்வாகம் கோயிலில் அக்கறை கொண்டுள்ளதோ என்பதைப் பொதுமக்களே விளங்கிக்கொள்ளுங்கள் என்று சந்திர தீபம் கேட்டுக்கொள்கிறது.

சந்திரதீபம் கோயில் நன்மையைக் கருதியதே ஒழிய மற்றொன்றும் கருதியதில்லை.

முன்னின்று முகமளிக்கும்
மூத்தவிநாயகனே கேள்
என்னென்று சொல்வேன்
உன் பெருமையினை
நன்றின்று நமது நிர்வாகம்
நமசிவாய முதலிவழி
முன்னின்று உன்னை
உயர்த்திட உழைக்கட்டுமே.

# சாமிகள் சண்டையிட்டுக்கொண்டனர்

செல்வச்சந்நிதியில் மௌனவிரதம் இருக்கும் ஒரு சுவாமியும் சர்வோதய ஆச்சிரமத்தைச் சேர்ந்த ஒரு சுவாமியும் தாளையன் தர்மநிலயத்தைச் சேர்ந்த ஓர்சுவாமியும் மூவருமாக அடிபட்டுக்கொண்டார்களாம். அடிபடவேண்டியதன் காரணம் சர்வோதய இயக்க கொடிநாட்டுவிழா வைபவத்திற்கு ஒரு காணித்தகராற்றில் எழுந்த அடிபிடியாகும். மௌனசுவாமியின் கையை முறுக்கி முதுகில் ஏறி உழக்கினார்கள் தாளையன்சுவாமியும சர்வோதயச்சாமியும். இதனாலே மௌனசாமிக்கு முதுகிலும் கையிலும் பெரிய காயம் ஏற்பட்டிருக்கிறது எம் சைவசமயத்து சாமிக்கூட்டம்.

# கடவுளும் காதலிக்கிறாரா?

கொக்குவில் மேற்கில் ஐயனார் கோவில் என்றழைக்கப்படும் சித்தி விநாயகர் ஆலயத்தில் இம்முறை நடந்த அலங்கார உற்சவத்தில் இர உற்சவங்களில் சித்திவிநாயகரும பித்துப்பிடித்து ஓடும்வண்ணம் ஒலிபெருக்கிமூலம் செய்துவிட்டார்கள்.

சித்திவிநாயகரும் பத்தியுடன் வாழ்ந்துவந்த ஐயனார் கோயிலில் அவருக்குக் காதல்போதை ஊட்டப்பட்டதன்மூலம் கதிகலங்கிப் போனார் என்பதே எமது கருத்தாகும்.

ஒலிபெருக்கியில்வந்த ஓசையைக் கேட்டு "அவள் பறந்து போனாளே என்னை மறந்து போனாளே" என்று சிதிவிநாயகர் அர்த்தராத்திரியில் அலறியதைக்கேட்டு யார்தான் அதிசயப்படாதிருக்கமுடியும்.

காமாட்சி மீனாட்சி கல்யாணம் பண்ணலாமா என்று கதறியதைக் கேட்டு யார்தான் சித்திவிநாயகருக்குச் சித்தப்பிரமையோ என்று எண்ணாது விட்டிருப்பர்.

ஆண்டவன் என்பான் எம்மை தீமையிலிருந்து மண், பெண், பொன்னெனும் மூவகை ஆசைகளிலுமிருந்து நீக்குபவன். அவன் ஆலயத்திலேயே அலறும் ஒலிபெருக்கியில் காதலலீலைகள் பேசும் பாடல்களைப் போட்டு ஏன் எமது சைவத்தின் புனிதத்தை கெடுக்கிறார்களோ தெரியவில்லை.

# மானிப்பாய் மருதடி விநாயகர்பற்றி
## வழிபடுவோர் சங்க அங்கத்தவர் கூறுவதாவது

மானிப்பாய்

ந. துரைசுவாமி
மானிப்பாய் மருதடிவிநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க அங்கத்தவர்,
மானிப்பாய்.

பேரன்புக்கு உரிய சந்திரதீபம் ஆசிரியர் அவர்கட்கு தங்கள் பத்ரிகை இக்காலத்தில் வெளியிடுவதால் சைவசமய குருமார் கோயில் தர்மகர்த்தாக்கள் பிரசங்கம் செய்வோர் ஆகியோரின் போலித்தனம் வெளிப்படையாக தெரிகிறது. தங்கள் பத்திரிகையில் கீழ தரப்படும் விசயத்தை பிரசுரிக்கவும். உண்மையான விசயம் தான் தருகிறேன். இந்த ஆண்டு மானிப்பாய் மருதடி கோயில் கன்னிக்கால் நாட்டியவர் கோயில் குருக்கள். இங்கு நடைபெற்று வந்தது கன்னிக்கால் நாட்டிவைக்கும் குருக்கள் தான் கொடியேற்றம் செய்வது. இந்தமுறை கோயில் குருக்களை திருவிழாவிறகு முதல் நாள் நிற்பாட்டி போன ஆண்டு சித்திரைப்பறுவம் திருவிழாவை மாதகல் நுணசை முருகமூர்த்தி கோயில் கொடியேற்ற தினத்தில் கொடிமர வெண்டையம் கழண்டு அல்லோலகல்லோலத்துடன் திருவிழா செய்தவர் கதுர் சிவசுப்பிரமணியக் குருக்கள். இவர் மாதகலில் வசிப்பவர். முன்பு இவர் இந்தக் கோயிலில் பூசை செய்து களவு எடுத்து கோயிலால் நீக்கப்பட்டவர் பின்பு போனமுறை பந்தம் பிடித்து கொடியேற்றி திருவிழா முடிய கோயில் சாமான்களை இவரும் மச்சானும் திருடி இவர் வீட்டுக்கு பொலீஸ் மூலமாக சாமான்களை மறைத்து விட்டார்கள். இந்த முறை மாதகல் நுணசை முருகன் கோயில் திருவிழா இல்லாமல் வாலஸ்த்தாபனம் செய்து இருக்கிறார்கள். இவர் முன்பு 1977ம் ஆண்டு கணேசரின் முறையில் மாசிமாத முதலாம் திகதி மருதடிப் பிள்ளையார் கோயிலில் காசு களவு எடுத்துக் கணேசன் நேரில் பிடித்தவர். இவரை அதன்பின்பு மருதடிக் கோயிலில் கணேசன் இருக்கும்வரையும் கோயில்பக்கந் தலைகாட்டவில்லை. இவரை இந்தமுறை ஏற்படுத்தியவர் வருகிறமாச தர்மகர்த்தா. பயிலிட்டியைச் சேர்ந்த வயிரமுத்து மகள் சுப்புலட்சுமியை கலியாணம் இரண்டாம்தரம் செய்தவர். இவர் பெயர் காசிநாதன். கணேசனின வைப்புப் பெண தையல்நாயகி வாரிசு, இராசகாரி இரத்தினராசா இவர்கள் மூவரும் ஒன்றுகூடி இந்தக் குருக்களை ஏற்படுத்தி திருவிழாச்செய்தார்கள். திருவிழாவில் வசந்தமண்டபத்தில் குருக்களும், நவாலி வில்லடிகாரனும் சினிமா மெட்டில் வேதம் கோஷம் ஒலி வாங்கி கையில்வைத்து தங்களாலியன்றவரை குளறினார்கள். குருக்கள் சினிமாநடிகர் ஜெனரல் சக்கரவர்த்தி படத்தில் எழுதக்காட்டும்போது கோயில்பூசைசெய்யும் போஸ் கொடுத்து இருக்கிறார். தேகம் பெருத்தவர்; முன்வாய் பல்லு இல்லாதவர். சர்வாங்க சவரம் செய்யதவர். ஒரு சிவாச்சாரியார் இருந்து திருவிழாச்செய்யத் தகுதி உண்டா? தங்கள் பத்திரிகையில் இதைத் தயவு செய்து வெளியிடவும்.

இப்படியான அந்தணர்கள் இருந்தால் கோயில்கள் என்ன நிலையில வளர்ச்சி அடையும். சைவசமயத்தை விற்று பணம் சம்பாதிக்கும் எத்தர் கூட்டம். மற்றது அடுத்த கடிதம். இந்த விசயம் சகலதும் உண்மை. மற்றது மருதடி மஞ்சத் திருவிழா அன்று பகல் இரண்டு பருவம் அடைந்த பெண்பிள்ளைகளிடம் கணேசனின் இரண்டாவது மகன் இரத்தினராசா கைபோட்டுச் சேட்டை செய்யப் பார்த்தாராம் டிக்கற் கொடுக்கும் இடத்தில். பருவபபெண்கள் டிக்கற் வாங்காமல் போய்விட்டார்கள். இதை நேரில் நான் பார்த்தேன். இன்னும் பல விசயம் இருக்கிறது.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
ந. துரைச்சாமி

# பரராசசேகரப் பிள்ளையாரும் பெண்ணை அருகிருத்தச்சொல்கிறாரோ?

கல்கி இல்லத்தைச் சேர்ந்த திரு. சின்னத்துரை அவர்களைச் சந்திக்க வேண்டி அவர் இல்லம் சென்றிருந்தேன். அலுவல்களை முடித்துக் கொண்டு திரும்பிக்கொண்டிருக்கையில் "என்னருகில் நீயிருந்தால்" என்ற பாடல் ஒலிபெருக்கியில் பாடிக்கொண்டிருந்தது. அப்பொழுது அப்பாட்டுவந்த திசையைத் திரும்பிப் பார்க்கவும் பரராசசேகரப்பிள்ளையார் முகப்பு அலங்கரிக்கப்பட்டிருப்பதைக் கண்டு என்ன விசேசம் என்று ஓர் அன்பரைக் கேட்டேன். (அந்த அன்பர் ஆசிரியர்போல் தோற்றமளித்தார்) அவர் "இங்கு மகோற்சவம் நடைபெறுகிறது" என்றதும் "அப்படியானால் பெண் அருகில் இருப்பதுதானா பரராசசேகரப்பிள்ளையாருக்கு விருப்பமாக இருக்கிறது; அதுதானா மகோற்சவமாகக் கொண்டாடப்படுகிறது; அதைத்தான் ஒலிபெருக்கியில் பாட்டாகப் போட்டுப் பாடிககாட்டுகிறார்கள்" என்று கேட்டேன். அவர் சிரித்துக்கொண்டு "இங்கு இளைஞர்கள் பெருங் குழறுபடி" என்று பதிலளித்துவிட்டுப் போய்விட்டார்.

நான் அவ்வேளை "இது இளைஞருக்கல்ல; மகோற்சவம் செய்யும் குருக்களுக்கும் விருப்பம்போலும்" என்று கூறிச்சென்றேன். பெருவாரியாக இணுவில்வாழ் பிராமணர்கள் சண்டித்தனம், கட்சிப்பிரிவினை, சுயநலம் முதலிய பழிகளால் மூழ்கடிக்கப்பட்டு அதனாலே தமது அறநெறி முழுவதையும் மறந்துவிட்டனர். இந்தப் பழிகளுக்கு இணுவில் கந்தசுவாமி கோவிலும் நீண்டகாலமாகப் பலியாகிவருகிறது. வீம்பும் வேடிக்கையுமே இவ்வூர் மக்களுக்குப் பெரும் பொருளாகத் தென்படுகிறது. இதனால் பகைதான் பெருகும்; தருமம் அகலும். நாம் என்ன செய்யமுடியும். தலையிழைத்தால் ஏனைய அங்கங்களும தடுமாறுவதுபோன்று விரதசீலங்களுடன் நடைபெறவேண்டிய மகோற்சவம் காமச்சுவைகள்மலிந்த களியாட்டுவிழாக்களாக நடைபெற்றால் அதைத் தடுத்துநிறுத்த வலியற்ற சமுதாயத்தைக் குறிப்பாக எமது தமிழினத்தை நாம் என்ன சொல்லலாம்.

தமிழுக்காக உயிர்கொடுப்பதாகச் சொல்வோர் தமிழனது உயர்ந்த பண்புகளை அழித்தொழித்தல் என்பது ஒரு அரசியல் வீம்பன்றி வேறில்லை. இவர்களது வீரபபேச்சில் உண்மையில்லை.

# கோயில்வீதியிலா மீன்விற்பனை

கோண்டாவில் பலாலி வீதியில் (கொடுத்தூக்கியாலடிச் சந்தி) பிள்ளையார் கோவிலின் முன்பாக சில நாட்களுக்குமுன் நான் சென்றுகொண்டிருக்கும்போது அப்பிள்ளையார் கோவில்முன்பாக மீன்காரனை மறித்து மீன் வாங்கினார்கள் அக்கோயிலைக் கும்பிடும சிலர். அதில் கோயில் இருக்கிறது என்பதை சிறிதளவேனும் மதியாமை கண்டு நான் வருத்தப்பட்டுக்கொண்டேன். குடையிற்சாமி என்னும் பெரியாரின் சமாதியும் அருகில் இருக்கிறது. இதேபோன்று வேறு கோவில்வீதிகளில் வைத்து மீன்விற்பனை செய்வதைக் கண்டுள்ளேன். அதுமட்டுமன்று ஆடியபாதம் இறச்சிக்கடை எனப்பெயரிட்டு கொக்குவிலில் ஓர் இறச்சி விற்பனை நிலயம் இருக்கிறது. இவைகளையெல்லாம் கட்டுப்படுத்தி சைவ நன்னெறியை வளர்த்திட யார் வரப்போகிறார் என சந்திரதீபம் கவலை தெரிவிக்கிறது.

# திருக்கேதீச்சரம் பட்டர் அந்தியேட்டியும் செய்தார்

அருள்மிகு திருக்கேதீஸ்வர ஆலயத்தில் அர்ச்சகராக இருக்கும் பட்டர் என்பவர் யாரோ செத்தவந்தர் ஒருவருடைய அந்தியேட்டியைச் செய்துவைத்தாராம். அதனாலே திருப்பணிச்சபை காரியதரிசி திரு. நமசிவாயத்திடம் பலத்த ஏச்சுவாங்கிக் கொண்டார். இச்சம்பவம்பற்றி பொலிகண்டி கந்தவனததைச் சேர்ந்த ஒரு அன்பர் நமது காரியாலயத்தில் வந்து செய்தி தெரிவித்துக் கொண்டார்.

# வழக்கம்பரை
## அம்மன்கோவில் பூசையின்றிப் பூட்டப்படுமா?

சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோவிலில் சமீபத்தில் பல பிரச்சனைகள் தோன்றின. அக்கோயில் எஜமான் ஒருவர் தற்சமயம் நடந்துகொள்ளும் நிலையில் ஊரில பல கட்சிப்பிரிவுகளும் நீதியற்ற செயலும் காடைத்தனம் முதலியனவும் பெருகிக்கொண்டதாம். இக்கோயிலில் பல திருப்பணிவேலைகள் இருப்பதைக்கண்டு எஜமான் சம்மதத்துடன் ஒரு திருப்பணிச்சபை ஆரம்பிக்கப்பட்டு திருப்பணி வேலைகள் செய்ய முன்வந்தனராம். ஆனால் அவர்கள் மீது சந்தேகம் கொண்டு அவர்களது திருப்பணிவேலைகளை ஆரம்பியாது தடுத்து நிறுத்திவிட்டார். எஜமானின் நடவடிக்கையும் அமையுமோ என பலரும் வேதனைப்படுகிறார். இதனாலே பணிப்புலம் அம்பாள் கோவிலை அரச சேவையில் இருக்கும் ஓர் உத்தியோகத்தர் சைவநீதி தெய்வநம்பிக்கை தமிழரது உயர்ந்த இலட்சியங்கள் அத்தனையும் அழித்தொழித்து கோயிலை பூசைஇலாது பூட்டிக்கிடக்கச் செய்ததுபோல் இந்த எஜமானாகள் உண்மை அறிவு இலாதகன் தனது மூர்க்கத்தனமே பெரியதென்று நினைப்பாரேயன்றி அன்பு அறம் எண்ணார்.

கோயிலில் பல கட்சிப்பிரிவுகள் தோன்றுமாயின் அக்கோயிலால் யாது பயன்? இறைவனது தருமம் பற்றி ஒற்றுமைப்படாத நாங்கள் இனி எங்கு சென்று ஒற்றுமைப்படுவோம். தமிழர் என்று சுதந்திரம் காண்பார்.

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கில் இருக்கும் வை. நல்லையா அவர்களால் [illegible] பாதுகாப்பின் பொருட்டு சந்திரதீப அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org